1743 3

NEW METHOD

ELEMENTARY GEOGRAPHY

SALEM DISTRICT

28 MAR 1940
MADRAS
3298

BY

T. P. VENKATACHARI, M. A., L. T.

THE EDUCATIONAL PUBLISHING CO.,
THYAGARAYANAGAR :: MADRAS

புது முறை

ஆரம்ப ஜில்லா பூ-கோளம்

சேலம் ஜில்லா

915.482 [1]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 MAR 1940
MADRAS

ஆசிரியர்
திரு. பிரஸன்ன. வெங்கடாச்சாரி, எம்.ஏ. எல்.டி.

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
தியாகராயநகர் :: சென்னை

காப்பிரைட்] 1939 [விலை அணா 5

PRINTED AT
KABEER PRINTING WORKS
TRIPLICANE MADRAS

முகவுரை

பாடசாலையில் படிக்கும் சிறுவர் சிறுமிகள் உற்சாகத்தோடும், ஆர்வத்தோடும், பூகோள பொது விஷயங்களையும் நமது ஜில்லாவின் பூகோள விவரங்களையும் சுலபமாகக் கற்றறியுமாறு இப்புத்தகம் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. இதில் ஜில்லா வாசிகளின் வாழ்க்கை முறை, தொழில், விளைபொருள், வியாபாரம், நடை உடை பாவனை முதலியன எவ்வாறு ஜில்லாவின் இயற்கை அமைப்பு, இருப்பிடம், சீதோஷ்ணஸ்திதி, மழை இவைகளைப் பொறுத்துள்ளன என்னும் பூகோள சாஸ்திரத்தின் பிரதானக் கொள்கை எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அரசாட்சி முறையும், அவைகளின் முக்கிய விஷயங்களும் இயற்கைப் பிரிவுக்கும் அரசியல் பிரிவுக்கும் உள்ள சம்பந்தமும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. வேண்டிய அளவு, நகர சரித்திரமும், பரிபாலன முறையும் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

பூகோளத்தைச் சரியான முறையில் அறிந்துகொள்வதற்கு வேண்டிய படங்களும் ஆங்காங்கே சேர்க்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அத்தியாய இறுதியிலும் பயிற்சிக் கேள்விகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் சில பயிற்சிகள் உடனுக்குடன் வாயினால் பதிலளிக்கக் கூடியவையாயும், சில எழுதிக் காட்டும் வகையிலும் கொடுக்கப்ட்டிருக்கின்றன.

பட சம்பந்தமாகக் கொடுத்திருக்கும் கேள்விகளைப் பிள்ளைகள் தங்கள் சித்திர நோட்டுப் புத்தகத்தில் எழுதியும் வரைந்தும் காட்டச்செய்வது நன்மை விளக்கும்.

கூடுமானால், பிள்ளைகளே முக்கியமாகக் கவனிக்கக் கூடிய சிற்சில இடங்களுக்குக் கூட்டிச் சென்று, அவைகளை நேரில் காட்டி, பூகோள சம்பந்தமான விவரங்களைத் தெரிவிப்பது நலம் என்று கருதப்படுகிறது.

பூகோள சாஸ்திர அபிவிருத்தியில் ஊக்கமுள்ள ஒவ்வொருவரும் இச்சிறு நூலை ஆதரிப்பாரென்று நம்புகிறேன்.

ஆசிரியர்

பொது விஷயங்கள்

		பக்கம்
1.	நமது நாடு	1
2.	திசைகள்	3
3.	வெயில் மந்தார, மழை நாட்கள்	4
4.	பருவங்கள்	6
5.	வாயு—காற்று	8
6.	மழை உண்டாவது எப்படி	9
7.	மழையும் மழையின் செய்கையும்	11
8.	கடலும் துறைமுகமும்	12
9.	கடலும் கடற்பிரயாணமும்	13
10.	கிராமமும் நகரமும்	15
11.	கிராம வாசிகளும் நகரவாசிகளும்	16
12.	வியாபாரம்	18
13.	போக்குவரத்துச் சாதனங்கள்	19
14.	தொழிற்சாலைகள்	20
15.	கிராமத்தில் வாழும் ஜனங்கள்	21

சேலம் ஜில்லா

1.	பொதுத் தோற்றம்	23
2.	சேலம் நகரக்காட்சி	24
3.	மேட்டூர் அணைக்காட்சி	26
4.	ஹொகனகல் நீர் வீழ்ச்சியின் காட்சி	28
5.	திருச்செங்கோட்டுக் காட்சி	29
6.	கொல்லிமலைக்காடுகளின் காட்சி	30
7.	ஆத்தூர்ச் சமவெளிக் காட்சி	31
8.	வடக்கில் உள்ள மலைநாடுகளில் சுற்றும் பிரயாணம் ...	32
9.	சேலம் ஜில்லாவின் இருப்பிடம்	34
10.	மேடு பள்ளங்கள்	34
11.	சீதோஷ்ண நிலையும் மழையும்	36
12.	விளைபொருள்கள்	36
13.	வியாபாரமும் கைத்தொழிலும்	38
14.	ஜனங்கள், மதங்கள், பாஷைகள்	39
15.	போக்கு வரவுக்குரிய சாதனங்கள்	39
16.	ஜில்லா ஆட்சி	40
17.	தாலுக்காகளும் முக்கியபட்டணங்களும்	40
18.	சீதோஷ்ணமும், விளைபொருள்களும் மனித வாழ்க்கையும் ...	43

புது முறை

ஆரம்ப ஜில்லா பூ-கோளம்

முதல் பாகம்

பொது விஷயங்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 MAR 1940
MADRAS

1. நமது நாடு

சிறுவர்களே! நீங்கள் வசிக்கும் கிராமத்தைப் பலமுறைகள் சுற்றிப் பார்த்திருப்பீர்கள். அதன் அமைப்பைப் பற்றியும் அறிந்திருப்பீர்கள். நீங்கள் இப் படத்தைப் பாருங்கள்.



கிராமத் தோற்றம்

இது ஒரு கிராமம் அமையும் வகையைக் குறிப்பிடுகிறது. கிராமத்தில் மக்கள் வசிக்கும் இடத்தை ஊர் என்கிறோம். சாதாரணமாக ஊர், கிராமத்தில் எவ்விடத்தில் அமையும்? படத்தில் பாருங்கள். ஊர்கள் அநேகமாக ஜலவசதியுள்ள இடங்களிலேயே ஏற்படும். அங்குப் போக்குவரவுச் சாதனமும் ஏற்பட்டு இருக்கும்.

கிராமத்தில், ஊரைச் சுற்றிலும் நன்செய், புன்செய் நிலங்களும், ஜல வசதிக்கான ஆறு, ஏரி, குளம், கிணறுகளும் இருக்கின்றன. சில கிராமங்களில் இயற்கையாக உள்ள மேடுகளும், மலைகளும் கூடக் காணப்படும்.

உங்கள் கிராமத்தில் கணக்கப்பிள்ளையும், மணியக்காரரும் கிராம உத்தியோகஸ்தர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இவர்கள் தங்கள் வேலையை சரிவரச் செய்கிறார்களா என்பதைப் பார்க்க ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் அடிக்கடி உங்கள் ஊருக்கு வருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவர் யார்? அவர் இருப்பிடம் எது?

மேற்பார்வையிடவரும் சர்க்கார் உத்தியோகஸ்தருக்குத் தாசில்தார் என்பது பெயர். அவர் பலகிராமங்களை மேற்பார்வை இடுவார். அவர் மேற்பார்வையிடும் 150 அல்லது 200 கிராமங்கள் சேர்ந்த தொகுதிக்குத் தாலுக்கா என்பது பெயர். அவரது காரியாலயம் (ஆபீஸ்) தாலுக்காவின் முக்கிய கிராமத்திலேயே இருக்கும். அதுவே தாலுக்காவின் பிரதான

கிராமம். அது மற்றக் கிராமங்களை விடப் பெரியதாக இருக்கும். நாம் அதை நகரம் என்று சொல்கிறோம்.

தாசில்தாரின் வேலையை மேற்பார்வையிடுபவர் கலெக்டர். அவர் அதிகாரத்தில் அடங்கிய பல தாலுக்காக்கள் சேர்ந்து ஒரு ஜில்லா, அல்லது டிஸ்ட்ரிக்டு ஆகிறது. இதைப் போல் பல ஜில்லாக்கள் சேர்ந்தது ஒரு இராஜதானி, அல்லது மாகாணம் எனப்படும். நம் இராஜதானிக்குச் சென்னை இராஜதானி என்பது பெயர். இராஜதானியின் மேல் அதிகாரி கவர்னர் ஆவர். அவரே இராஜதானியை ஆள்கிறார். நம் இராஜதானியின் கவர்னர் சென்னப்பட்டினத்தில் வசிக்கிறார். சென்னப் பட்டினம் நமது இராஜதானியின் தலை நகரம்.



இந்தியா

படத்தைப் பார். இது நமது தாய் நாடு என்பதை நீ சரித்திர பாடத்தில் படித்திருக்கிறாய். இதற்கு இந்தியா என்பது பெயர் அல்லவா? நமது சென்னை இராஜதானி இதில் ஒருபாகம். பல இராஜதானிகள் கொண்டது ஒரு நாடு. நம் நாட்டை ஆள்பவர் ஆரும் ஜார்ஜ் மகிபர். அவர் லண்டன் மாநகரில் வாழ்கிறார். அவருக்குப் பதிலாக, நம் நாட்டின் இராஜாங்க விவகாரங்களை நடத்துபவர் வைஸ்ராய் என்பவர். அவர் நமது நாட்டின் தலைநகரமாகிய புது டில்லியில் வசிக்கிறார்.

பயிற்சி

1. மணலில் ஒரு கிராமத்தில் காணக்கூடியவைகளைப் போட்டுக்காட்டு. பயிரிடும் நிலங்களைப் புல்வைத்தும், ஊரை அட்டை வீடுகள் வைத்தும், ஏரி, குளம், ஆறு இவைகளைத், தகரங்களில் ஜலம் வைத்தும் மலைகளைக் கற்களைவைத்தும் காட்டு.

2. பல பிள்ளைகள் சேர்ந்து அட்டையில் கிராம மாதிரி (மாடல்) செய்து பாருங்கள்.

3. உன் கிராமத்தின் பெயர் என்ன? உன் தாலுக்காவின் பெயர் என்ன? அது எந்த ஜில்லாவில் இருக்கிறது?

4. உன் ஜில்லா கலெக்டர் இருக்கும் பட்டணம் எது?

4. சென்னைக் கவர்னர் எங்கு வசிக்கிறார்? புது டில்லியில் வசிப்பவர் யார்? அவர் ஏன் அங்கு வசிக்கிறார்?

5. நம்மை ஆளும் அரசர் பெயர் என்ன? அவர் வசிப்பது எங்கே?

2. திசைகள்

பிள்ளைகளே! நீங்கள் சூரியனைக் காலையில் எங்கே காண்கிறீர்கள்? மத்தியானத்திலும், சாயுங்காலத்திலும் எங்குக் காண்கிறீர்கள்? சூரியன் காலையில் கிழக்கிலும், மத்தியானத்தில் உச்சி



திசைகள்

யிலும், மாலையில் மேற்கிலும், இருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சூரியன் காலையில் கிழக்கில் உதித்து, மத்தியானத்தில் உச்சியில் நின்று, சாயுங்காலத்தில் மேற்கில் மறைகின்றான். மேலும், வடக்கு, தெற்கு என்னும் திசைகளும் உங்களுக்குத் தெரியும் அல்லவா? பகலில், ஓர் இடத்தில் இருந்துகொண்டு கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளையும் நீங்கள் கண்டு சொல்லி விடுவீர்கள். ஆனால் இரவில் நீங்கள் திசைகளை எவ்வாறு கண்டு சொல்ல முடியும்? யோசித்துப் பாருங்கள். நீங்கள் மேகம் ஓட்டம் இல்லாத



வட துருவம்

நாட்களில் ஆகாயத்தில் பல நக்ஷத்திரக் கூட்டங்களைப் பார்த்திருப்பீர்கள். அவை இடம் விட்டு இடம் மாறுவதையும் கவனித்திருப்பீர்கள். ஆனால், அவற்றுள் ஒரு நக்ஷத்திரம் மாத்திரம் இடம் மாறுவதுஇல்லை. அதுவே துருவ நக்ஷத்திரம். படத்தில் '1' இலக்கமிட்டு இருப்பது துருவ நக்ஷத்திரம். இது எப்பொழுதும் வடக்கிலேயே காணப்படும். ஆகாயத்தில் மற்றொரு புறத்தில் ஏழு நக்ஷத்திரங்கள் கூடிய கூட்டம் இருப்பதைப் படத்தில் பாருங்கள். அக்கூட்டம் '2' என்னும் இலக்கம் இட்டுக் காட்டப்பட்டு இருக்கிறது. இதைச் சப்தரிஷிக் கூட்டம் என்கிறோம். இக்கூட்டத்தில் உள்ள நக்ஷத்திரங்களில் இரண்டு எப்பொழுதும் துருவ நக்ஷத்திரத்தையே காட்டிக் கொண்டு இருக்கும். எனவே நீங்கள் மேக ஓட்டம் இல்லாத இரவுகளில் இந்தச் சப்தரிஷி நக்ஷத்திரக் கூட்டத்தைக் கொண்டு வடக்குத் திசையை அறியலாம். பின்னர் மற்றத் திசைகளை அறிவது சுலபம். இந்த ஏழு நக்ஷத்திரங்களில் ஒன்று வசிஷ்டர், மற்றொன்று அருந்ததி எனப்படும்.

மேகங்கள் மூடிக் கொண்டு இருந்தால் இரவில் திசைகளை எவ்வாறு கண்டறிவது? படத்தைப் பாருங்கள். இது என்ன? இதில் ஒரு ஊசி அங்கும் இங்கும் திரும்புகிறது. இது என் அவ்வாறு திரும்புகிறது? இதற்குக் காந்த ஊசி என்பது பெயர். இது ஒரு கண்ணாடிக் கூட்டில் வைக்கப்பட்டு இருக்கிறது. இந்த ஊசி எப்பொழுதும் ஒரு திக்கை நோக்கியே நிற்கும். இதன் அம்புநுனி காட்டும் திசை வடக்கு. உன்னால் முடியுமானால் இதை வேறு திசையைக் காட்டச் செய்துபார். மேக ஓட்ட நாள்களில் இரவில் இதைக்கொண்டு திசைகளை அறியலாம். இதை மற்றக் காலங்களிலும் கூட உபயோகிக்கலாம்.



மாலுமி திசைக்கருவி

படத்தில் நான்கு திசைகளைக் குறித்திருப்பதைக் கவனி. இவற்றைத் தவிர, இன்னும் நான்கு குறிப்புகளும் இருக்கின்றன. அவை யாவை? அவை ஒவ்வொன்றும், இரண்டு திசைகளுக்கு இடையில் சம தூரத்தில் குறிக்கப்பட்டு உள்ளன. ஆகவே அவை ஒவ்வொன்றும், இரண்டு திசைகளுக்கு இடையில் உள்ள திசையைக் குறிக்கின்றது.

படத்தைப் பார். வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, ஆகிய இவை நான்கும் நான்கு நடுத் திசைகள் ஆகும். அட்டவணையைப் பார்த்து, இவற்றுள் ஒவ்வொன்றும் எந்த எந்தத் திசைகளுக்கு மத்திய திசை என்பதைத் தெரிந்துகொள்.



அஷ்டதிக்குகள்

திசை	ஒருபுறம்	மறுபுறம்	குறிப்பு எழுத்துக்கள்
வடகிழக்கு	வடக்கு	கிழக்கு	வ. கி.
தென்கிழக்கு	கிழக்கு	தெற்கு	தெ. கி.
தென்மேற்கு	தெற்கு	மேற்கு	தெ. மே.
வடமேற்கு	மேற்கு	வடக்கு	வ. மே.

ஆகவே முக்கியத் திசைகள் நான்கும், உப திசைகள் நான்கும் சேர்ந்து எட்டுத் திசைகள் ஆகின்றன. இவைகளை அஷ்ட திக்குகள் என்றும் சொல்வது உண்டு.

பயிற்சி

1. ஒரு அட்டையில் வட்டமாகத் துண்டுசெய்து அதில் எட்டுத் திக்குகளையும் காட்டு.
2. ஒரு காந்த ஊசியைக்கொண்டு, காந்த ஊசி மாதிரி செய். இதற்கு வேண்டிய சாமான்களை உன் உபாத்தியாயரிடம் பெற்றுக்கொள்.
3. நான்கு உப திசைகள் எவை?
4. இரவில் மேக மூட்டம் இல்லாத நாட்களில் நீ எப்படித் திசைகளை அறிவாய்? ஓர் இரவில் திசையைக்கண்டு காகிதத்தில் குறித்துக்கொள். மறுநாளில் அது சரியா என்பதைப்பார்.

3. வெயில், மந்தார, மழைநாட்கள்

படம் 1 ஐப்பார். ஒருவன் குடை பிடித்துக்கொண்டு மேல் சட்டையைக் கழற்றிக் கையில் போட்டுக் கொண்டு செல்கிறான். அவன் தன் உள் சட்டையின் பித்தான் வாயையும்

படம் 1 படம் 2 படம் 3 படம் 4



வெயில் மந்தார மழை குளிர்

திறந்துவிட்டு இருக்கிறான். அவன் முகத்தில் வியர்வை அதிகமாக ஒழுகுவதையும் கவனி. அவன் இவ்வாறு இருப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா? வெப்பம் அதிகமாக இருப்பதால் அவன் இவ்வாறு செல்கிறான். இவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்படக் கூடிய நாளை வெயில், அல்லது மிகு வெப்பநாள் என்கிறோம். படம் 2 ஐப்பார். இதில் காணப்படும் மனிதன் பூரண ஆடை தரித்தவனாக இருக்கிறான். அவன் கையில் குடையும் இல்லை. ஏன்? இது வெப்பம் இல்லாத நாள். ஆகையால் அவன் அவ்வாறு இருக்கிறான். படத்தில் சூரியனைச் சில மேகங்கள் மறைப்பதையும் பார். இது மந்தார நாள் ஆகும். ஆங்காங்கு மேகம் மூட்டமாக இருக்குமாயின், அப்பொழுது நாம் வானம் மந்தாரம் போட்டிருக்கிறது என்று சொல்லுவோம். அம்மாதிரி இருக்கும் நாட்களை மந்தார நாட்கள் என்கிறோம். படம் 4 ஐப்பார். இதில் ஒருவன் கம்பளத்தால் முக்காடு இட்டுப் போர்த்திக்கொண்டு இருக்கிறான். இவன் ஏன் கம்பளம் போர்த்திக் கொண்டு இருக்கிறான்? நீங்கள் எப்பொழுது கம்பளச் சட்டை போட்டுக் கொள்வீர்கள்? குளிர் நாட்களில் அல்லவா? எனவே அக்காலத்தில் வெயில் அதிகமாகக் காய்வதில்லை. அவ்வாறு வெயில் அதிகம் காயாமையால் குளிர் மிகுந்து இருக்கும் நாட்களைக் குளிர் நாட்கள் என்கிறோம்.

படம் 3 ஐக்கவனி. அதில் ஒரு மனிதன் குடை பிடித்துக் கொண்டு இருக்கிறான். ஆனால் அவன் பூரண ஆடை தரித்துக்கொண்டு இருக்கிறான். மழையும் பெய்கிறது. படத்தைப் பார்க்கும் பொழுது நல்ல மழை என்றே ஏற்படுகிறது. இவ்வாறு மழை பெய்யும் நாட்களை மழை நாட்கள் என்கிறோம். சாதாரணமாகக் காற்றடிக்கும் பொழுது மழை தூறுவதும் உண்டு. அம் மாதிரியுள்ள நாட்களை நாம் மழை நாட்கள் என்று சொல்லுவதில்லை.

ஒரு தினத்தில் வெப்பம் எப்பொழுது அதிகம்? காலையிலா? மத்தியானத்திலா? அல்லது மாலையிலா? மத்தியானத்தில் சூரியன் உச்சியில் இருக்கிறான். அப்பொழுதுதான் வெப்பம் அதிகமாக இருக்கும். இரவில்

சூரியன் பிரகாசிக்காததால் அது குளிர்ச்சியாக இருக்கிறது. பொதுவாக வெயில் அதிகமாகவும், மேகம் இல்லாமலும் உள்ள நாட்களை மிகு வெப்ப நாள்கள் என்றும், ஆகாயத்தில் ஆங்காங்கு மேகம் பரவி, சூரியனை அவ்வப்போது மறைத்துக்கொண்டு இருக்கும் நாட்களை மந்தார நாட்கள் என்றும் சொல்கிறோம். சூரியனை கண்ணுக்குத் தெரியாமல் மப்பிட்டு மூடி, மழையும் பெய்யாமல், குளிர்மட்டும் ஏற்படும் நாட்களைக் குளிர் நாட்கள் என்கிறோம். மழைபெய்யும் நாட்களை மழை நாட்கள் என்கிறோம். இந்நாட்களில் அநேகமாக, நமக்குச் சூரியன் காணப்படுவதில்லை.



வெதர் சார்ட் ——மாதம்

நாம் குளிர் நாட்கள், மழை நாட்கள், வெப்ப நாட்கள் ஆகிய இவற்றைத் தினந்தோறும் தேதி போட்டு ஓர் அட்டவணையில் குறித்து வைத்துக் கொள்ளலாம். இவ்வாறு குறித்துக் கொள்வதை, வாயுநிலைப்படம், அல்லது வேதர்சார்ட் என்கிறோம். இக் குறிப்பைச் சாதாரணமாகப் பகல் 2 மணிக்குக் குறித்துக் கொள்வதே நலம்.

வேதர் சார்ட்

வெதர் சார்ட் குறிப்பை மேல் உள்ள அட்டவணையில் இருப்பது போலத் தகுந்த சித்திரங்கள் போட்டும் எழுதலாம். சாதாரணமாக, வார்த்தைகளைக்கொண்டும் எழுதலாம்.

பயிற்சி

1. நீங்கள் ஒரு மாதத்திற்கு வாயுநிலைப்படம் (வெதர் சார்ட்) ஒன்று தயார் செய்யுங்கள்.
2. வெயில் நாள் அல்லது, மிகுவெப்ப நாள் எம் மாதிரியுள்ள நாள்?
3. எதை நாம் குளிர் நாள் என்கிறோம்?
4. மழை நாட்கள் எவை?

4. பருவங்கள்

முன்பாடத்தில் சில நாட்களை வெப்ப நாட்கள் என்றும், சில நாட்களைக் குளிர் நாட்கள் என்றும், மற்



பருவங்கள்

றும் சில நாட்களை மழை நாட்கள் என்றும் கூறியுள்ளோம். ஆகவே, இதனால் எல்லாத் தினங்களும் ஒரே மாதிரி இருப்பதில்லை என்பது தெரிகிறது. சிற்சில சமயங்களில், ஒரே தினத்தில் வெப்பமும், மழையும், மந்தாரமும் கலந்து இருப்பதும் உண்டு. இவ்வாறு தினத்துக்குத் தினம் ஏற்படும் நிலையைக் காலநிலை என்கிறோம். கால நிலை சாதாரணமாக, தினத்துக்குத்தினம் சிறிது வித்தியாசப் பட்டாலும், பொதுவாக ஒரு வருஷத்தில், ஒரு பாகத்தில் ஒரேவிதமான கால நிலை, சராசரியில் மாறுபாடு அதிகம் இல்லாமல் காணப்படும். இவ்வாறு ஏற்படும் ஒரே மாதிரியான கால நிலையை உடைய பாகங்களைப் பருவங்கள், அல்லது ருதுக்கள் என்கிறோம். நம் நாட்டில் பலவித ருதுக்கள் இருக்கின்றன.

தென் இந்தியாவில் நமக்கு ஆறு ருதுக்கள் உள்ளன. அவை, வசந்த ருது, க்ரீஷ்ம ருது, வருஷ ருது, சரத் ருது, ஹேமந்த ருது, சிசிர ருது என்பன. இவற்றிற்குச் சரியானமாதங்களையும், பருவங்களின் பெயர்களையும், அக்காலங்களில் ஏற்படும் விசேஷங்களையும் கீழ் உள்ள அட்டவணையைப் பார்த்து அறிந்து கொள்ளுங்கள்.

ருதுக்கள்	பருவங்கள்	மாதங்கள்	விசேஷக் குறிப்பு
வசந்தருது	கோடை	சித்திரை - வைகாசி	வெப்பம் - மிதம்; புஷ்பங்களும் பழமும் விசேஷம்; சுகவாசகாலம்; **வறண்ட - கோடை.**
கிரீஷ்மருது	,,	ஆனி - ஆடி	வெப்பம் - அதிகம்; கோடை மழை பெய்தாலும் பெய்யும். **கோடை** காலம்.
வருஷ்ருது	முன்மழை	ஆவணி - புரட்டாசி	வெப்பம் - அதிகம்; மழை ஆரம்பமாகும் காலம். **மழைக்**காலம்.
சரத்ருது	மழை	ஐப்பசி - கார்த்திகை	குளிர் - வெப்பம் குறைவு; நல்ல மழை. **குளிர்** காலம்.
ஹேமந்தருது	முன்பனி	மார்கழி-தை	வெப்பம் - குறைவு; குளிர்; மழையில்லை; அறுவடைக்காலம். **குளிர்** காலம்.
சிசிரருது	பின்பனி	மாசி-பங்குனி	வெப்பம் அதிகம் - இரவின் பிற்பகுதியில் பனி. **கோடை** காலம்.

பயிற்சி

1. ருதுக்கள் என்று எவற்றிற்குப்பெயர்? நம் நாட்டில் எத்தனை ருதுக்கள் இருக்கின்றன?
2. மழை எப்பொழுது பெய்கிறது?
3. பனிக்காலம் எது?
4. கோடை மாதங்கள் எவை?

5. வாயு—காற்று

நாம் எப்பொழுதும் காற்றினால் சூழப்பட்டு இருக்கிறோம். ஆனால் அது நம் கண்ணுக்குத் தெரிவது இல்லை. அதை நாம் எப்படி அறிகிறோம்? அது அசையும்போது நம் மீது படுவதுபோல் உணர்கிறோம். சில சமயங்களில் இவ்வுணர்ச்சியும் இருப்பதில்லை. அசையாத காற்றை வாயு என்கிறோம். அது அசைந்தால், அப்பொழுது அதைக் காற்று என்கிறோம். நம் பூமியைச் சுற்றி வாயு மண்டலம் பரவி இருக்கிறது.

வாயுவை நாம் காணமுடியாது என்று கூறி இருக்கிறோம் அல்லவா? அப்படிக் காணமுடியாத அதற்கு எடை உண்டா? நீ கால் பந்து பார்த்திருக்கிறாய் அல்லவா? அதன் உள் இருக்கும் ரப்பர் பையை எடுத்து, அதில் காற்று இல்லாமல் செய்து, அதை ஒரு தராசில் வைத்து எடையைக் கண்டு பிடி. பின்னர் அதில் காற்றை அடை. அவ்வாறு காற்றை அடைத்த பிறகு அந்த ரப்பர் பையைத் தராசில் வைத்து நிறுத்துப் பார். எடையில் வித்தியாசம் ஏற்படுகிறதா? ஆம், ஏற்படுகிறது. அந்த வித்தியாசம் எதனுடைய எடை. அதனுள் அடைத்த காற்றின் எடை அல்லவா? ஆகவே வாயுக்கு எடை உண்டு என்பது தெரிகிறது. காற்று இல்லாத இடமே இல்லை. காற்று எல்லா இடங்களையும் அடைத்துக் கொள்கிறது. "காலி இடங்களில் எல்லாம் காலி இருக்கிறது". இதில் இரண்டாவது 'காலி' என்பது தெலுங்கு பதம். காலி என்பது தெலுங்கில் காற்று என்பதைக் குறிக்கும் பதம் ஆகும்.

தென்னை மரத்தின் மட்டைகள் ஏன் அசைகின்றன? காற்று அடிப்பதனால்தான் அவை அசைகின்றன. காற்று மேகமண்டலத்திற்கு மேலும் பரவி இருக்கிறது. இக்காற்று மேகங்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அடித்துக் கொண்டு வருகிறது. காற்று எப்பொழுதும் வீசிக்கொண்டே இருக்கும். ஆனால் அது எப்பொழுதும் ஒரே திசையை நோக்கி வீசுவது இல்லை. ஒரு துணியை யாகிலும், அல்லது காற்றாடியை ஆகிலும் விட்டுக் காற்றின் திசையைக் கவனி.



வெதர்காக்

காற்றின் திசையை அறிய ஒரு கருவி உண்டு. அதற்குக் காற்றாடி இயந்திரம் என்பது பெயர். அதை ஆங்கிலத்தில் "வெதர் காக்" என்கிறோம் அதைப் படத்தில் பார்.

இதைப்போன்ற கருவிகளை நீ பெரிய கட்டிடங்களின் மீது பார்த்திருப்பாய். இது ஒரு கம்பத்தின் உச்சியில் உள்ள அம்பு நுனி. இது நாற்புறமும் திரும்புமாறு வைத்திருக்கிறது. இது மிகவும் இலேசானது. எனவே காற்றடிக்கும்போது, காற்று எந்தத் திசையை நோக்கி அடிக்கிறதோ அந்தத் திசையை நோக்கி இதுவும் திரும்பி நிற்கும். சாதாரணமாக, காற்றின் திசையை அது எத் திசையிலிருந்து வருகிறதோ அத்திசையின் பெயரைக் கொண்டே குறிப்பது வழக்கம். நாம் வழக்கத்தில் எட்டுத் திசைகளினாலேயே காற்றின் திசையையும் குறிக்கிறோம்.

காற்று ஏன் அடிக்கிறது? சூரிய வெப்பத்தினால் வெப்பம் அடைந்த காற்று இலேசாகி, மேல் நோக்கிப் பரவுகிறது. அப்போது பக்கங்களில் உள்ள நீர் நிலைகளின் மீது உள்ள காற்று, கீழ் நிலையில் பரவுகிறது. எனவே காற்று வீச ஆரம்பிக்கிறது. நிலப்பாகம் சீக்



கடல் காற்றும், நிலக்காற்றும்,

கிரம் வெப்பத்தை இழுத்துக் கொள்ளும். அம்மாதிரியே சீக்கிரத்தில் விடவும் விடும். ஆனால் ஜலமோ இதற்கு நேர் எதிராக வெப்பத்தை மெதுவாகத்தான் இழுக்கும்; பின்பு மெதுவாகவே விடும். ஆகையினால் தான், கடலோரங்களில் பகலில் கடற்காற்றும், இரவில் நிலக்காற்றும் வீசுகின்றன. படத்தைப் பார்த்து இது எவ்வாறு என்பதைத் தெரிந்து கொள்.

காற்றூடி யந்திரத்தைக் கொண்டு நாம் தினசரி காற்றின் விவர அட்டவணை ஒன்று தயார் செய்யலாம். இதை நாம் தினந்தோறும் ஒரே குறிப்பிட்டகாலத்திலேயே கவனித்து அட்டவணை தயரர் செய்ய வேண்டும். இவ்வாறு தயார் செய்து பார்த்தால், நம்நாட்டில் காற்றுச் சுமாராக வருஷா வருஷம், இந்த இந்தக் காலத்தில் ஒரேவிதமாக வீசுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். நம் நாட்டில் கோடையில் வீசுவது தென் மேற்குப் பருவக் காற்று; மாரிக் காலத்தில் வீசுவது வட கிழக்குப் பருவக் காற்று.

அட்டவணை

தேதி	காற்றின் திசை

பயிற்சி

1. நீங்கள் உங்கள் பள்ளிக்கூடத்தில் காற்றூடி இயந்திரம் செய்து வையுங்கள்.

2. இவ்வாறு வைத்த யந்திரத்தைக்கொண்டு காற்றின் திசையைக் குறிக்கும் அட்டவணை ஒன்று தயார் செய்யுங்கள்.

3. கோடையில் காற்று விசேஷமாக எந்தத் திசையிலிருந்து வீசுகிறது? மாரிக்காலத்தில் எந்தத் திசைக் காற்று அதிகம் வீசுகிறது?

4. நிலக்காற்று, கடல்காற்று என்றால் என்ன? அவை எவ்வாறு ஏற்படுகின்றன? அவை ஏற்படும் காலம் எது?

6. மழை உண்டாவது எப்படி

துணிகளைத் துவைத்து உலர்த்தினால் அவை என்ன ஆகின்றன? அவை உலர்ந்து விடுகின்றன. இதை நீங்கள் பலமுறை கவனித்திருப்பீர்கள். ஈரத்துணிகளில் இருந்த ஜலம் என்ன ஆயிற்று என்று நீங்கள் எப்பொழுதாவது சிந்தித்தது உண்டா? ஈரத்துணிகளில் இருக்கும் ஜலம் சூரிய வெப்பத்தினாலோ, அல்லது காற்றடிக்கும் வேகத்தினாலோ நீராவியாக மாறிவிடுகிறது. ஒரு பாத்திரத்தில் ஜலம் வைத்துப் பாருங்கள். சில நாட்கள் கழிந்த பின் பாத்திரத்தில் வைத்த ஜலம் குறைந்திருக்கக் காண்பீர்கள். இதுவும் ஜலம் நீராவியாக மாறியதின் பயனேயாம். மற்றொரு பாத்திரத்தில் சிறிது பெட்ரோல் வைத்துப் பாருங்கள். அது விரைவில் காணாமல் போகிறது? அது எங்கே போயிற்று. அதுவும்

வாயுவாகவே மாறிவிட்டது. ஆகவே சில ஜலபதார்த்தங்கள் சீக்கிரமாகவும், சில மெதுவாகவும் வாயுவாக மாறுகின்றன என்பது தெரிகிறது. காற்றிற்கு மசி உறிஞ்சும் காகித (ப்ளாடிங்) த்தைப் போல் ஈரத்தை உறிஞ்சும் சக்தி இருப்பதைக் கவனி.



மழைபெய்வது எப்படி

நீங்கள் வானத்தில் பல விதமான மேகங்களைப் பார்த்திருப்பீர்கள். அவற்றுள் கருமேகங்களே மழை பொழிகின்றன. என்? இவற்றில் மாத்திரமே சிறு ஜலத் துளிகள் அதிகம் இருக்கின்றன. மேகங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதைப் படத்தில்பாருங்கள். ஒரு மூக்குள்ள பாத்திரத்தில் ஜலம் ஊற்றி, அதன் வாயை மூடி, அதை அடுப்பின்மீது வைத்துக் காய்ச்சுங்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் மூக்கின் மூலமாகப் புகையைப்போன்ற ஒன்று வெளிவரு



மழை உண்டாவது எப்படி

வதைக் காண்பீர்கள். அது என்ன? அது தான் நீராவி என்பது. நீராவிக்கு அருகில் ஒரு கரும்பலகையைப் பிடித்துப் பாருங்கள். என்ன ஏற்படுகிறது? நீராவி பட்ட இடங்களில், பலகையிலிருந்து முத்து முத்தாக நீர்த்துளிகள் விழுகின்றன. இதனால் நீராவி குளிர்ந்த பலகையின் மீது பட்ட உடனே ஜலமாக மாறுகிறது என்பது தெரியவில்லையா?

இவ்வாறே, இவ்வுலகத்திலுள்ள கடல், ஏரி, குளம் மற்றும் உள்ள பல்வேறு நீர் நிலைகள் இவற்றில் உள்ள ஜலம் சூரிய வெப்பத்தினால் நீராவியாக மாறுகிறது. நீராவியானது காற்றைவிட இலேசானது. ஆகவே இது உயரக் கிளம்பி, குளிர்ந்து நீர்த்துளிகளாக மாறி நிற்கிறது. இவ்வாறு ஏற்பட்ட நீர்த்துளிகளின் வெண்மையான கூட்டங்களே மேகங்சள் எனப்படும். இம்மேகங்கள் காற்றால் அடிக்கப்பட்டு, இன்னும் குளிர்ந்து கருமேகங்களாக மாறுகின்றன. இவை குளிர்ந்த காடுகளின் மூலமாகச் செல்வதாலோ, அல்லது மலைகளினால் தடுக்கப்பட்டு மேலே கிளம்பும்போது அவற்றின் மீதுள்ள குளிர்ந்த காற்றுப் படுவதாலோ, மழையாகப் பொழிகின்றன. இவ்வாறு பெய்யும் மழை ஜலம் பூமியின் மீது விழுந்து ஓடைகளாகவும், ஆறுகளாகவும் பாய்ந்து, ஏரி, குளங்களை நிரப்புகிறது; மழை கடலிலும் பொழிகிறது; பூமியிலும் ஊறிச் செல்கிறது. இவ்வாறே ஜலம் ஆவியாக மாறி, மழையாகப் பெய்து ஜலத்தோடு கலக்கிறது.

மழை எல்லா இடங்களிலும் ஒரே அளவாகப் பெய்வது இல்லை. அது

அளவிலும், பெய்யும் காலத்திலும் இடத்துக்கு இடம் வித்தியாசப்படுகிறது. இதன் அளவை நாம் மழையளக்



மழை அளக்கும் கருவி

கும் கருவி, அல்லது வர்ஷமானியைக் கொண்டு அறியலாம். இதற்கு ஆங்கிலத்தில் 'ரெய்ன்கேஜ்' என்பது பெயர். படத்தைப் பார். அதில் காணப்படுவது ஒரு வர்ஷமானி. இதை மழை பெய்யும் பொழுது, திறந்த வெளியில் வை. மழை நின்ற உடன் பக்கத்திலிருக்கும் அளவு ஜாடியைக் கொண்டு அதனுள் உள்ள நீரை அளந்து பார். சாதாரணமாக, தினமும் குறித்த நேரத்தில் வருஷமானியில் சேர்ந்துள்ள ஜலத்தை அளந்து பார்ப்பது வழக்கம். மழையளவை அங்குலத்தில் சொல்வார்கள். தினசரி, (தேதி வாரி) மழையின் அளவைக் குறிக்கும் ஒரு அட்டவணையைத் தயார் செய்யலாம். இவ்வாறு தயார் செய்யும் அட்டவணையிலிருந்து மழை எந்தெந்த நாட்களில் எவ்வளவு எவ்வளவு என்பதை அறிவது சுலபம். நமது நாட்டின் கிராமவாசிகள் $\frac{1}{2}$ அடி மழையளவை ஒரு சுழி, அல்லது ஒரு சுமை மழை என்பது வழக்கம். ஒவ்வொரு தாலுக்கா ஆபிஸிலும் ஒரு வருஷமானி இருக்கும்.

பயிற்சி

1. உங்கள் பள்ளிக்கூடத்தில் வருஷமானி ஒன்றைத் தயார் செய்யுங்கள். அதைக்கொண்டு மழைக் காலத்தில் ஒரு மாதத்திற்கு, தினசரி பெய்யும் மழையின் அளவைக்கொண்டு ஒரு அட்டவணையைத் தயார் செய்யுங்கள்.
2. மழை எவ்வாறு ஏற்படுகிறது?
3. நீராவி, கருமேகம், இவை யாவை?
4. நீராவியாக மாறிய ஜலம் மறுபடியும் ஜலத்தோடு சேர்வது எப்படி?

7. மழையும் மழையின் செய்கையும்

முன் பாடத்தில் மழை எவ்வாறு உண்டாகிறது என்பதையும், அதன் அளவை எப்படி அறிவது என்பதையும் நீங்கள் கற்றுக்கொண்டீர்கள். அவ்வாறு ஒவ்வோர் இடத்திலும் பெய்யும் மழை நீர் என்ன ஆகிறது என்பதைப்பற்றி இந்தப் பாடத்தில் கவனிப்போம்.



ஆறுகள் உண்டாவது எப்படி

மழை பெய்யும்போதும், மழை பெய்து முடிந்த உடனும், நீங்கள் உங்கள் வீடுகளின் அருகில் உள்ள சாலைகளையும், நிலங்களையும் கவனித்து இருக்கிறீர்களா? மழை ஜலம் எவ்வாறு ஓடுகிறது? மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடுகிறது அல்லவா? ஆங்காங்கு உள்ள பள்ளங்களில் ஜலம் தேங்கி நிற்கும். மேலும் நல்ல மழை பெய்த உடன் உங்கள் ஊரில் உள்ள குளத்தைச் சென்று பாருங்கள். அதில் ஜலம் அதிகரித்து இருப்பது உங்களுக்குத் தெரியும். நல்ல மழை பொழியாது, சிறிது

அளவு மழை பொழியுங் காலங்களில் ஜலம் பூமியில் ஊறி விடுவதை நீங்கள் கவனித்து இருக்கிறீர்களா ?

மழை பெய்ய ஆரம்பித்த உடன் முதலில் பெய்யும் ஜலம் பூமியில் சுவறி விடுகிறது. பின்னர், மேலும் மேலும் மழை பெய்யுமேயானுல், ஜலம் முதலில் பள்ளமான குட்டைகளில் சேருகிறது. பிறகு அது வழிந்து சிறு கால்வாய்களாக ஓட ஆரம்பிக்கிறது. இவ்வாறே மலைகளிலும், மேட்டு நிலங்களிலும் பெய்யும் மழை ஜலம் அருவிகளாக ஓடிச் சிற்ருறுகளாக ஆகின்றன. படத்தில் காட்டியபடி இச் சிற்ருறுகள் ஒன்று கூடிப் பெரும் ஆறுகள் ஆகிப் பாய்ந்து, ஏரிகள், சமுத்திரங்கள் இவற்றை அடைகின்றன. இம்மாதிரி ஓடும் மழை ஜலம், மணல், சேற்றை, குப்பை முதலியவைகளை அடித்துக் கொண்டு செல்வதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இம்மழை ஜலம் வேகமாக ஓடும்பொழுது பூமியை அறுத்துக்கொண்டும், மேடுகளைக் கரைத்துக் கொண்டும் செல்வது இயற்கை.

பூமியில் சுவறிய ஜலம், சிதறிய இடத்தில் மணல் மண் பாகங்களைக் கடந்து, ஆழத்தில் உள்ள பாறைகள் மீது ஊற்றுகளாக ஓடுகின்றன. இவ்வாறு ஊறி ஓடும் ஜலமே, நம் கிணறுகளில் ஜலம் எடுக்க எடுக்கக் குறையாமல் ஊற்ருக வந்துகொண்டே இருக்கிறது. இம்மாதிரி மனித வாழ்க்கைக்கும், தாவர, பிராணி வர்க்கங்கள் உயிர் வாழ்வதற்கும் இன்றியமையாத ஜலம் மழையின் மூலமே நமக்குக் கிடைக்கிறது. மழை ஜலமே மிகவும் பரிசுத்தமானது ஆகும். இவ்வாருன ஜலச் சுழற்சியை இயற்கையாகக் காலந் தவருமல் ஏற்படுமாறு செய்துள்ள கடவுளின் செயல் அற்புதச் செயல் அன்ருே ?

பயிற்சி

1. மழை பெய்த உடன், வெளியில் சென்று, தரையின்மீதும் ஜல பாகங்களிலும் ஏற்பட்டுள்ள மாறுதல்களைக் கண்டு சொல்.

2. மழை ஜலம் பூமியின்மீது எவ்வாறு மாறுதல்களை உண்டு பண்ணுகிறது ?

3. உங்களூரில் மலைகள் உண்டா? அவற்றின் பெயர்களைச் சொல்.

4. உங்கள் ஊரில் பல மேட்டுப்பாகங்கள் இருக்கின்றனவா ?

5, உங்கள் உரில் உள்ள ஆற்றின் பெயர் என்ன? ஏரி இருக்கிறதா?

8. கடலும் துறைமுகமும்

கடல் என்ருல் என்ன ? கடல் ஒரு பெரிய நீர் நிலை. கடலைவிடப் பெரிய நீர் நிலை ஒன்றே உண்டு ; அதுவே சமுத்திரம் என்பது. கடலின் எதிர் கரையைக் காண முடியாது. இது எக்



கடல்

காலத்திலும் வற்றிப்போவதில்லை. இதன் கரை அனேகமாக மணற்பாங்காக இருக்கும். இதன் அலைகள் ஓயாமல் கரையை நோக்கி மோதிக் கொண்டே இருக்கின்றன. கடல் மிகவும் ஆழம் உள்ளது. இதன் நீர் உவர்ப்புடையது. கடலைக் கடந்து செல்லவேண்டுமானுல் கப்பல் ஏறியே செல்ல வேண்டும். கடலில் மீன்கள் விசேஷமாகக் கிடைக்கும். செம்பட

வர்கள் படகுகளில் சென்று மீன் பிடித்து வருவார்கள். கடலில் சில படகுகள் செல்வதைப் படத்தில் பார்.

கடல்கள் ஆங்காங்கு நிலத்தில் குடைந்து சென்றிருக்கும். இவ்விடங்கள் கப்பல்கள் வந்து தங்குவதற்கு வசதியும் பாதுகாப்பும் உள்ளவை ஆகும். இம்மாதிரி இடத்தைத் துறை முகம் என்கிறோம். இவ்வாறு இயற்



துறைமுகம்

கையாக வேண்டும் இடங்களில் எல்லாம் துறைமுகங்கள் ஏற்படுவது அரிது. எனவே அவசியமான இடங்களில் கடற்கரை ஓரத்தில் துறை முகங்கள் செயற்கையாகக் கட்டிக் கொள்வதும் உண்டு. படத்தில் பார். அது ஒரு செயற்கைத் துறைமுகம். கரை ஓரமாகக் கடலின் ஒரு பாகத்தை நாற்புறமும் சுவர் எழுப்பிப் பிரித்து, கப்பல்கள் வந்து தங்குவதற்குச் சௌகரியமாகக் கட்டி இருக்கிறார்கள். ஒருபுறத்தில் கப்பல்கள் உள்ளே நுழைய வழி இருக்கிறது. இவ்வழியில், கப்பல்களுக்கு வழி காட்ட ஒரு கலங்கரை (விளக்குத் தூண்) இருப்பதைக் கவனி. கலங்கரைகளுக்குத் தீப ஸ்தம்பம் என்னும் பெயரும் உண்டு. இது "லைட் ஹவுஸ்" எனப்படும். இது துறைமுகப்பட்டினங்களில் எல்லாம் இருக்கும். இது மாலுமிகளுக்கு இங்குத் துறைமுகம் இருக்கிறது என்பதைக் காட்டி எச்ச



ரிக்கை செய்கிறது. இது போலவே, கடலின் நடு இடங்களில் கடற்பாறைகளும், குன்றுகளும் இருந்தால், அவை இருக்குமிடங்களுக்கு அருகில் கலங்கரைகள் ஏற்படுத்தி, மாலுமிகளுக்கு எச்சரிக்கை செய்வதும் உண்டு.

நம் இராஜதானியின் தலைநகரமாகிய சென்னப் பட்டினத்தில் ஒரு செயற்கைத் துறைமுகமும், ஒரு கலங்கரையும் இருக்கின்றன. நாம் இந்த வாரம் சனிக்கிழமை சென்னைக்குச் சென்று அவைகளைப் பார்த்து வருவோம்.

பயிற்சி

1. களிமண்ணால் ஒருமாதிரி செயற்கைத் துறைமுகம் செய்து அதில் ஒரு கலங்கரையையும் வைத்துக் காட்டு.

2. கடல் என்பதற்கு உள்ள விசேஷ அடையாளங்கள் எவை?

3. துறைமுகம் எதற்காக அவசியம் வேண்டும்? இயற்கைத் துறைமுகத்துக்கும் செயற்கைத் துறைமுகத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

4. கலங்கரை என்றால் என்ன? அதன் உபயோகம் என்ன? ஒரு படம் வரைந்து காட்டு.

9. கடலும் கடற்பிரயாணமும்

கோபாலா, இந்தப் படத்தைப் பார். நீங்கள் சென்ற சனிக்கிழமை சென்று பார்த்த இடங்களில் இதைப் போல் இருந்தது எது? சென்னைத் துறைமுகம் அல்லவா? நீங்கள் சென்னைத் துறைமுகத்தில் அன்று பார்த்த தூக்குப்பொறி(க்ரேன்)யைப்

படத்தில் கவனியுங்கள். இவற்றால் என்ன உபயோகம் சொல்.

கோபாலன்: அங்குப் பல தூக்குப்பொறிகள் இருந்தன. அவற்றில் சில கனத்தசாமான்களை இலேசாகத் தூக்கிக் கப்பலில் ஏற்றின. மற்றும் சில கப்பலிலிருந்து பெரிய சாமான்களைச் சுலபமாகத் தூக்கி இறக்கின. இவற்றை மின்சாரத்தால் இயக்குகின்றனர். இவை மனிதர்களின் கஷ்டத்தைக் குறைக்கின்றன.



சென்னைத் துறைமுகம்

கப்பலில் ஏற்றும் சாமான்கள் நம் நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுவன ஆகும். அவை நம் நாட்டின் பல இடங்களிலிருந்தும் இங்குக் கொண்டு வரப்படுகின்றன. இவற்றை நம் நாட்டு ஏற்றுமதிப் பொருள்கள் என்கிறோம். கப்பல்களிலிருந்து இறங்கிய சாமான்களை இறக்குமதிப் பொருள்கள் என்று சொல்கிறோம். இவை வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு வந்தவை. இவற்றை நம் நாட்டின் பல இடங்களுக்குக் கொண்டு செல்வார்கள். முத்து ! அங்கு ஒரு கப்பல் வந்ததைக்கண்டோம் அல்லவா ? அது எங்கிருந்து வந்தது? அதைப்பற்றி நீ அறிந்து கொண்ட விஷயங்களைச் சொல் பார்ப்போம்.

முத்து : நாம் துறை முகத்தில் இருந்தபொழுது துறைக்கு வந்த கப்பல் இரங்கூனி லிருந்து வந்தது. இது துறைக்கு வந்த உடன், பலர் வெளியில் இக்கப்பலைச் சூழ்ந்து கொண்டனர். துறைமுக ஆபீஸிலிருந்து ஒரு வைத்தியர் கப்பலின் உள் சென்று, சுமார் அரைமணி நேரம் கப்பலில் வந்த பிரயாணிகளைப் பரீக்ஷித்துவிட்டு வெளியே வந்தார். இடையிலே சுங்க உத்தியோகஸ்தர்களும் வேண்டும் பரீக்ஷைகளைச் செய்தனர். பின்னர் அனேக பிரயாணிகள் வெளியே வந்தனர். கப்பலின்மீது அக்கப்பலின் பெயர் 'ஏரின் பூரா' என்று எழுதியிருந்தது. கப்பலில் மாலுமிகளும் இருந்தனர்.

ஆசிரியர் : சரி, முத்து சொன்னது மிகவும் அழகாக இருக்கிறது. உங்களில் யார், அன்று நாம் பார்த்த கலங்கரையைப் பற்றிச் சொல்லக்கூடியவர்? சுகந்தம், நீ சொல் பார்ப்போம்.

சுகந்தம் : கலங்கரை ஹைகோர்ட் கட்டிடத்தில் இருக்கிறது.



சென்னை ஹைகோட்டும் கலங்கரையும்.

இது மிகவும் உயரமானது. நாங்கள் தலைக்கு 2½ அணாக் கொடுத்து அதன் மேலே ஏறிச்சென்றோம். அங்குச் சுழல் படிக்கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. மேலே போகப்போக அதன் படிகள் மிகச்சிறியனவாக இருந்தன. எங்களுக்குப் பயமாகவும் இருந்தது. மேலே சென்றதும், அங்கிருந்து நாற்புறமும் சுற்றிப் பார்த்தோம். அதிக தூரம் வரையில் பட்டினத்தின் அமைப்புத் தெரிந்தது. பட்டினம் அங்கிருந்து பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தது. அக்கலங்கரைக் காப்பாளர் ஒருவர் அங்கிருந்தார். அவர் அக்கலங்கரை அரை நிமிஷத்திற்கு இருதரம் வெளிச்சத்தைக் காட்டும் என்றார். இது சென்னைத் துறைமுகத்தைக் குறிக்கும் என்றும், வேறு எந்தத் துறைமுகத்தில் உள்ள விளக்கும் இதைப்போல அரை நிமிஷத்திற்கு இருதரம் வெளிச்சத்தைக் காட்டாது என்றும் சொன்னார்.

பயிற்சி

1. தூக்குப் பொறியினால் என்ன உபயோகம்?
2. கப்பல் துறைக்கு வந்த உடன் ஏன் பிரயாணிகள் இறங்குவதில்லை.
3. கலங்கரை சென்னையில் எங்கு உள்ளது? அதைப் பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்.

10. கிராமமும் நகரமும்

மனிதர்கள் ஒருவருக்கொருவர் பலவிஷயங்களிலும் வித்தியாசப்பட்டே இருக்கின்றனர். இவ்வாறு இருந்தும், கூடி வாழ்தலே மனிதர்க்கு இயல்பாக இருக்கிறது. மேலும் ஒருவருடைய சகாயம் மற்றவருக்கு வேண்டுவதாயும் இருக்கிறது. பலவீடுகள் கும்பலாக ஏற்பட்டிருக்கும் இடத்தைக் கிராமம் என்கிறோம். இது மிகவும் சிறிய ஊர். கிராமங்களில் அனேகமாக வீடுகள் வரிசையாகக் கட்டப்பட்டு இருக்கும். அவை ஓலையாலும், மண்ணாலும் கட்டப்பட்ட வீடுகள். கிராமத்தில் சில தெருவுகளே இருக்கும். தெருவுகள் ஒவ்வொன்றிலும் இருவரிசைகள் உண்டு. அனேகமாகக் கிராமங்களில் ஒரு கோவிலும் அதைச் சுற்றித் தெருவுகளும் அமைந்திருக்கும். கிராமங்களில் ஜன நெருக்கம் எப்பொழுதும் குறைவாகவே இருக்கும். அவைகளில் பெரும்பான்மையினர் பயிர்த்தொழில் நடத்தும் வேளாளர்களாக இருப்பார்கள். அவர்கள் பூமியை உழுது பண்படுத்திப் பயிர் செய்து வாழ்கின்றனர். அவர்களுக்கு வருஷம் முழுவதும் வேலை இல்லை. நிலத்தை உழுது, விதை விதைத்து, நீர் பாய்ச்சி, களை எடுத்து, பருவகாலத்தில் அறுவடை செய்து, தான்யங்களைக் களஞ்சியத்தில் சேர்த்த பின்னர், மறுபடியும் பயிர் செய்யும் காலம் வரையிலும் அவர்களுக்கு வேலை இராது. ஆனால் வருஷத்துக்கு, இருபோகம், மூன்று போகம் விளையும் இடங்களில் மாத்திரமே அவர்களுக்கு அநேகமாக வருஷ முழுவதும் வேலை இருக்கும். கிராமத்தில் அவர்

களைத் தவிர, பலவிதக் கைத்தொழிலாளரும் வாழ்கின்றனர். கிராமத்தில் அனேகமாகப் பல விதமான பொருள்களும் விற்கப்படும் பல , சரக்குக் கடை ஒன்று இருக்கும். அங்குச் சிறிய பள்ளிக்கூடமே இருக்கும். கிராமங்கள் நீர் நில வளங்கள் உள்ள இடங்களில் நெருக்கமாகவும், இவை குறைவாக உள்ள இடங்களில், நெருக்கம் இன்றியும் இருக்கும்.

நகரங்கள் அளவிலும் ஜனவாழ்க்கையிலும் பெரியன. நகரங்களில் அனேகமாகப் பயிரிடக்கூடிய நிலங்கள் இரா. இங்கு வீடுகளும் தொழிற்சாலைகளுமே விசேஷம். பட்டணத்து வீடுகள் அனேகமாகக் கற்களால் கட்டப்பட்டு இருக்கும். இங்குச் சாலைகளும் வீடுகளும் பெரியன. போக்கு வரவுச் சாதனங்கள் இங்கு அதிகமாக இருக்கும். நகரங்களில் பலவித கடைகளும் உண்டு. அநேகமாக ஒவ்வொரு கடையிலும் ஒன்று அல்லது இரண்டு விதமான சாமான்களே கிடைக்கும். நகரங்களில் பல ஆபீசுகளும் உண்டு. நகரங்களில் வாழ்பவர் வியாபாரமும், உத்தியோகமும், இன்னும் மற்ற உபதொழில்களும் நடத்தி வாழ்கின்றனர். பட்டணங்களில் எப்போதும் சப்தமாக இருக்கும். கிராமங்களைப் போல் அவை நிசப்தமாக இரா. பட்டணங்களில் பங்களாக்கள் கட்டிக்கொண்டு பெரிய பணக்காரர்கள் வாழ்கின்றனர். ஆகவே பெரிய பட்டணங்கள் ஏற்படக்கூடிய இடங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று சொல்லமுடியுமா?

மனிதர் வசிப்பதற்கு ஏற்ற இடங்களில், பெரிய தொழில்களுக்காகிலும், அல்லது வியாபாரத்துக் காகிலும் வசதி யிருக்கு மாயின் அவ்விடங்களில் பட்டணங்கள் ஏற்படும், ஒரு பெரிய துறைமுகமோ, பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் வசதிகளோ ஏற்படின் அங்கு ஒரு பட்டணம் ஏற்படுவது இயல்பு. இவற்றுடன், போக்கு வரவுச் சாதன சௌகர்யமும் இருக்கவேண்டும். மற்றும் பெரிய கோவில்களோ, அல்லது சுக வாசஸ்தலமோ இருந்தால் அங்கெல்லாம் பட்டணம் ஏற்படும். ஜில்லாத் தலைநகரங்கள் எல்லாம் பட்டணங்களே. பெரிய இருப்புப்பாதைகள் கூடும் இடங்கள் எல்லாம் பட்டணங்களாக மாறுகின்றன.

பயிற்சி

1. கிராமங்கள் எங்கு ஏற்படும்? பட்டணங்கள் எங்கு ஏற்படுகின்றன?
2. கிராமத்தில் முக்கியமாக ஏற்படும் தொழில்கள் எவை? அவற்றுள் பெரும் பான்மையோரால் நடத்தப்படுவது எது?
3. பட்டணங்களில் நடைபெறும் தொழில்கள் எவை?
4. பட்டணத்து வியாபாரத்துக்கும் கிராமத்து வியாபாரத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

11. கிராமவாசிகளும் நகரவாசிகளும்

பிள்ளைகளே, இன்று நம் வகுப்பில், ஒரு புதிய பையன் வந்து சேர்ந்திருக்கிறான். அவன் யார்? அவன் எங்கிருந்து வந்திருக்கிறான்? உங்களுக்குத் தெரியுமா? அவன் சென்னையிலிருந்து வந்திருக்கிறான். அவன் தந்தையார் இப்பொழுதுதான் உத்தியோகத்திலிருந்து விலகி, கிராம வாசத்தை விரும்பி இங்கு வந்திருக்கிறார். அவன் பெயர் ராகவன். நாம் அவனுக்கு நம் கிராமத்தில் வாழ்பவர்களுடைய வாழ்க்கையைப் பற்றிச் சொல்வோம். அவன் நமக்குச் சென்னை நகரின் வாழ்க்கையைப் பற்றிச் சொல்லட்டும். ராகவா, முதலில் நீ கேள்வி கேள். கோவிந்தனும்

பாலுவும் உனக்குப் பதில் அளிப்பார்கள்.

ரா : இந்தக் கிராமத்தில் நடக்கும் முக்கியமான தொழில் என்ன ?

பா : இங்கு விவசாயமே முக்கியத் தொழில்.

ரா : விவசாயிகளுக்கு வருஷம் முழுவதும் வேலை உண்டா ?

கோ : இங்கு விவசாயிகளுக்கு வருஷம் முழுவதும் வேலை கிடையாது; வருஷத்தில் எட்டு மாதங்களே வேலை உண்டு. எங்கள் ஊர் ஏரியில் அவ்வளவு காலத்திற்கே ஜலம் தங்கும்.

ரா : மற்ற மாதங்களில் விவசாயிகள் என்ன செய்கின்றனர் ?

பா: அநேகமாக எல்லோரும் வேலையின்றியே வாழ்கின்றனர். ஆனால் இவ்விப்போது சிலர் நூல் நூற்பதைத் துணைத் தொழிலாகக் கொண்டு இருக்கின்றனர். சிலர் இங்குக் கிடைக்கும் ஒருவகைக் கோரையைக் கொண்டு பாய் முடைகின்றனர். பயிர் வேலை இல்லாத காலங்களில் சிலர் இங்கு உள்ள சர்க்கரைச்சாலையில் வேலை செய்கின்றனர்.

ரா : இங்கு வாழ்பவர்கள் எல்லோருக்கும் எழுதப் படிக்கத் தெரியுமா ?

கோ : எங்கள் கிராமத்தில் மிகச் சிலரே படித்தவர்கள். ஆனால் சென்ற வருஷத்திலிருந்து நம் பள்ளிக்கூடத்தில் இரவில் வயதானவர்களுக்குப் படிக்கவும் எழுதவும் கற்பிக்க ஆரம்பித்து இருக்கின்றனர். இன்னும் நான்கு வருஷங்களில் நம் கிராமத்தில் எழுதப் படிக்கத் தெரியாதவரே இருக்கமாட்டார் என்று சொல்லுகிறார்கள்.

ரா : இந்தக் கிராமத்தின் விவகாரங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன ?

பா : இந்தக் கிராமத்தில் ஒரு பஞ்சாயத்துச் சபை இருக்கிறது. அதன் அங்கத்தினர், அவ்வப்போது கூடி, கிராமப் பொதுக் காரியங்களை நடத்துகின்றனர். இந்தக் கிராமத்தில் ஒரு நல்ல(லைப்ரரி)புத்தக நிலயம் இருக்கிறது. அதற்கு நல்ல தினசரிகளும், வாரப் பத்திரிகைகளும் வருகின்றன. எங்கள் பஞ்சாயத்துக் கூட்டு மெம்பர்கள் இக் கிராமம் கூடிய சீக்கிரத்தில் முன்னேற்றம் அடைவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்து வருகிறார்கள்.

ரா : நான் செய்தது நல்லதே. என் தகப்பனார் என்னை ஒரு கிராமத்துக்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டாரே என்று எண்ணினேன். நீ சொன்னவைகளைக் கேட்டதும் எனக்கு ஆனந்தம் பொங்குகிறது.

ராகவா, இக்கிராம விஷயங்களைப் பற்றி நீ கேட்ட கேள்விகளுக்குப் பாலு நன்றாகப் பதில் கூறி வந்தான். நீ இக் கிராம வாழ்க்கையைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டு விட்டாய். இனி நீ இதுவரையிலும் வாழ்ந்து வந்த சென்னை நகரத்தின் வாழ்க்கையைப் பற்றிக் கிருஷ்ணன் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்.

கிரு : ராகவா, சென்னை மிகப் பெரிய ஊரோ ?

ரா : உனக்குத் தெரியாதா ? அது நம் இராஜதானியின் தலைநகரம் அல்லவா ? அது மிகப் பெரிய பட்டினம். அது நம் நாட்டிலேயே மூன்றாவது பெரிய பட்டினம் அல்லவா ?

கிரு : சென்னையில் நடக்கும் முக்கியத் தொழில்கள் எவை ?

ரா : சென்னை ஒரு பெரிய துறைமுகப்பட்டினம். அது நம் இராஜ

தானியின் தலைநகரம். அங்குப் பல தொழிற்சாலைகளும் இருக்கின்றன. ஆகவே வியாபாரம், சர்க்கார் ஆபீஸ்களிலும், இதர ஆபீஸ்களிலும், பெரும் வியாபார ஸ்தலங்களிலும் உத்தியோகம், தொழிற்சாலைகளில் வேலை செய்தல் ஆகியவையே முக்கியத் தொழில்கள். சென்னையில் வியாபாரிகள் பெரும் பணக்காரர்கள். அவர்களில் சிலர், தாங்கள் வியாபாரம் செய்யும் இடத்திற்கு அருகிலேயே குடியிருக்கின்றனர். சிலர் பட்டினத்தில் வியாபாரஸ்தலம் ஏற்படுத்திக் கொண்டு, அதன் பக்கத்தில் உள்ள அதிக நெருக்கம் இல்லாத புது மாம்பலம், கீழ்ப்பாக்கம், அடையாறு போன்ற இடங்களில் குடி இருந்து வாழ்கின்றனர். சென்னையில் கைத்தொழில் செய்வோரும் சிலர் இருக்கின்றனர். அங்குக் கடலில் சென்று மீன் பிடிப்பது ஒரு முக்கியமான தொழில். ஆங்காங்குப் பல போஜன சாலைகளும், சிற்றுண்டிச்சாலைகளும் நடத்தப்படுவதும் ஒரு பெரிய தொழிலாகும்.

கிரு : சென்னையில் ஜன நெருக்கம் அதிகமோ ?

ரா : ஆம், மிக அதிகம் ; இன்னும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆகவே, ஜனங்கள், ஆங்காங்கு இருந்த நெல் வயல்களையும், தோட்டங்களையும் அழித்து, வீடுகள் கட்டி, குடியேறிக்கொண்டு வருகின்றனர். கோபாலபுரம், தியாகராயநகர், வேதவல்லிபுரம், லக்ஷ்மிபுரம், ஸ்ரீபுரம் முதலியன அவ்வாறு புதிதாகக் குடியேறப்பட்டுள்ள இடங்கள் ஆகும்.

கிரு : அங்கு நம் கிராமத்தில் இருப்பது போல, ஒருவருக்கு ஒருவர் கூட்டுறவு அவ்வளவாக இல்லையோ ?

ரா : ஆம், நீ சொல்வது உண்மையே. பட்டினத்தில் அவர் அவர் தொழிலை அவர் அவர் நடத்துகின்றனர். அவர் அவருக்கு என்று ஏற்பட்ட சிநேகிதர்களும், சபைகளும் தவிர, மற்றப்படி ஒருவருக்கு ஒருவர் சம்பந்தம் அதிகம் இல்லை. ஊர் பெரியது. தொழில் முறையோ பல வகை. ஒரு தொழிலிலோ, ஒரு ஆபீஸிலோ இருப்பவர்களும் ஒரே இடத்தில் இருக்கிறார்கள் என்பது இல்லை.

ஆசிரியர் : பேஷ்! ராகவா! நீ சொல்லி வந்தவை எல்லாம் மிகவும் அற்புதமானவையாகவே இருந்தன. இவற்றை உன் வகுப்பினர் சிலர் நேரில் கண்டிருக்கின்றனர். உனக்குச் சீக்கிரத்திலேயே இக்கிராம வாழ்க்கை பிடித்து, சந்தோஷமாகத் தோழர்களுடன் வாழ்வாய்.

பயிற்சி

1. துணைத் தொழில் கிராமங்களில் ஏன் அவசியம் ?
2. உன் கிராமத்தை முன்னேற்றம் அடைவிக்க நீ என்ன செய்வாய் ?
3. 'கிராமத்தில் ஏற்படும் ஒற்றுமை, பட்டணத்தில் ஏற்படுவது கஷ்டம்' - ஏன் ?

12. வியாபாரம்

உங்களுக்கு வேண்டும் பொருள்கள் எல்லாம் உங்கள் ஊரிலேயே கிடைக்கின்றனவா ? உங்கள் ஊரில் கிடைக்கும் பொருள்கள் எவை ? அவையாவும் உங்கள் ஊரிலேயே உபயோகப்பட்டு விடுகின்றனவா ?

சாதாரணமாக, நமக்கு வேண்டும் பொருள்கள் எல்லாம் நம் கிராமத்திலேயே கிடைப்பது அரிது. நம் கிராமத்தில் உள்ள கடைக்காரன், ஆங்காங்குக்கூடும் சந்தைகளுக்குச்சென்று நம் கிராமத்தில் கிடைக்காத பொருள்களை வாங்கிக் கொண்டு வந்து நமக்கு

விற்கிறுன். சந்தைகள் குறித்த காலங்களில் குறித்த இடங்களில் நடைபெறும். சுற்றுப்புறத்தில் உள்ள கிராமங்களிலிருந்து பலவிதமான பொருள்களும் விற்பனைக்காக, சந்தைகளுக்கு வருகின்றன.

நம் கிராமத்தில் கிடைக்கும் பொருள்கள் முழுவதும் நம் கிராமத்திற்கே வேண்டுவதில்லை. நம் கிராம உபயோகத்துக்கு வேண்டுவது போக, அதிகம் இருப்பதைச் சந்தைகளில் கொண்டு விற்பது உண்டு. கிராமவாசிகள், சந்தைகளில் விற்க வேண்டும் பொருள்களை விற்றுவிட்டு, வாங்க வேண்டும் பொருள்களை வாங்கிக் கொண்டு வருவார்கள்.

மேலும் வெளிநாடுகளிலிருந்து வரும் பொருள்களும், இக்காலங்களில், ரயில் மூலமாகவும், பஸ்கள் மூலமாகவும் நம் கிராமங்களுக்கு வருகின்றன. நம் கிராமத்தில் கைத்தொழில் செய்வோர், அவர் செய்யும் சாமான்களில், கிராமத்தின் உபயோகத்துக்கு வேண்டுபவை போக, எஞ்சி நிற்பவற்றைப் பக்கத்துக் கிராமங்களுக்குக் கொண்டு விற்பார்கள் ; அல்லது கடைகளுக்குக் கொண்டு போடுவார்கள். நாம் கடைத் தெருவுக்குச் சென்று, அங்குக் காணப்படும் பொருள்களைச் சோதித்தால், நம் நாட்டில் கிடைக்கும் பொருள்கள் எவை, வெளிநாடுகளிலிருந்து வரும் பொருள்கள் எவை, என்பது சுலபமாக ஏற்படும். மேலும் நம் கிராமத்தில் எந்தெந்த மாதத்தில் என்னென்ன பொருள் கிடைக்கும் என்பதையும் தெரிந்து கொள்ளலாம். நீங்கள் கடைத் தெருவுக்குச் சென்று எந்தெந்த மாதங்களில் என்னென்ன பொருள்கள் உங்கள் கிராமத்தில் விளைகின்றன என்பதையும், அவற்றின் விலையையும் அறிந்து கொண்டு அவற்றைக் குறித்துக் கீழே உள்ள மாதிரி ஓர் அட்டவணை தயார் செய்யுங்கள்.

மாதம்	பொருள்	விலை	கூடுமானால் கிடைக்கக் கூடிய அளவு

பயிற்சி

1. உங்கள் கிராமத்துக்கு அருகில் எங்கெங்குச் சந்தை கூடுகின்றது? அது எந்தெந்த நாள்களில் கூடுகின்றன?

2. கூடும் சந்தைகளில் என்னென்ன பொருள்கள் கிடைக்கின்றன? உங்கள் கிராமத்திலிருந்து என்னென்ன பொருள்கள் சந்தைக்கு அனுப்பப்படுகின்றன?

3. கடைத் தெருவுக்குச் சென்று, அங்குக் கிடைக்கும் பொருள்களின் பெயர்களையும், அவை உற்பத்தியாகும் இடங்களையும், விலைகளையும் குறித்து ஓர் அட்டவணை தயார் செய்.

13. போக்குவரவுச் சாதனங்கள்

கிராமங்களாக இருந்தாலும், பட்டணங்களாக விருந்தாலும் அவை ஏற்படுவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களில் ஒன்று போக்குவரவுச் சாதனங்கள் என்பது ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது. சாதாரணமாகக் கிராமவாசிகள் அதிக தூரமில்லாமல் இருந்தால் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நடந்தே செல்வார்கள். அவர்கள் குறுக்கு வழியாகவே செல்வார்கள். அவ்வாறு அவர்கள் நடந்து செல்லும் வழி தேய்ந்து இருக்கும். இதற்குக் கால்நடைவழி என்பது பெயர். இவற்றின் வழியாகச் சாமான்களைக் கூட தலையில் தூக்கிச் செல்வது உண்டு. இவற்றைத் தவிர, கிராமங்களில் வண்டிப் பாதையும் உண்டு. கிராமங்களில் இரட்டை மாட்டுவண்டி, ஒற்றை மாட்டுவண்டி



இவை விசேஷம். கிராமங்களுக்குச் சிறிது தூரத்தில் சர்க்கார் பக்கா சாலைகள் செல்கின்றன. இவற்றின் மூலம் இக்காலத்தில் மோட்டார் பஸ்களும், லாரிகளும் செல்கின்றன. கிராமங்களில் கிடைக்கும் பொருள்கள் லாரிகள் மூலம் பட்டணங்களுக்குக் கொண்டு போகப்படுகின்றன.

இவற்றைத் தவிர, கிராமவாசிகள் வெளியூர்களுக்குச் செல்ல ரயில் வண்டிகளும் இருக்கின்றன. சாமான்களையும் ரயில் மூலம் அனுப்பலாம். ரயில் வண்டிகளில் இரவிலும் சௌகரியமாகப் பிரயாணஞ் செய்யலாம். மோட்டார் பஸ்ஸில் அதிக விரைவாகச் செல்லலாம்; ஆனால் அதில் சிரமம் அதிகம். கால்வாய்களோ, ஆறுகளோ, படகுகள் செல்ல வசதி



யாக இருந்தால், அவற்றின் மூலமாகவும் சாமான்களை அனுப்பலாம். படகுகள் மூலம் சாமான்கள் அனுப்பினால் செலவு குறைவு. கனமான பொருள்களைப் படகுகள் மூலம் அனுப்புவதே நலம்.

இவற்றைத் தவிர, போக்குவரவுக்குப் பிராணிகளையும் உபயோகப்படுத்துவது உண்டு. அவற்றின் மீது சுமைகளை ஏற்றிக்கொண்டு செல்வது மிகவும் சாதாரணமாக நடக்கும் காரியம் ஆகும்.

பயிற்சி

1. கிராமங்களில் பாதைகள் எவ்வாறு ஏற்படுகின்றன?

2. 'கிராமங்களில் கால்நடை விசேஷம்'—ஏன்?

3. பலவித போக்குவரவுச் சாதனங்களில் அதிக தூரம் செல்வதற்கு அதிக சௌகரியமானது எது? எது குறைந்த செலவு உள்ளது?

4. சாமான்களை வெளியூர்களுக்கு அனுப்ப, நீ கீழ் வருவன வற்றுள் எதை உபயோகிப்பாய்?—(a) இலேசான சாமானுக்கு; (b) கனமான சாமானுக்கு.

(i) படகு (ii) லாரி (iii) ரெயில் (iv) வண்டிகள்.

14. தொழிற்சாலைகள்

சாதாரணமாகக் கிராமாந்தரங்களில் தொழிற்சாலைகள் பெரியனவாக இரா. கிராமத்தில் பெருந்தொழிலுக்கு வசதி இருக்குமாயின், அக்கிராமம் நாளடைவில் பட்டணமாக மாறிவிடும். எனவே கிராமங்களில் முக்கியமாக இருக்கக் கூடிய தொழிற்சாலைகள் விவசாயத் தொழிலுக்கு வேண்டும் துணைத்தொழில்கள் செய்யப்படும் இடங்களே. விவசாயிக்குத் தச்சன், கருமான் இவ்விருவரும் மிகவும் அவசியமானவர்கள். தச்சனும், கருமானும் தொழில் நடத்தும் இடத்திற்குப் பட்டறை என்பது பெயர். தச்சன் வேலை செய்யும் இடம் தச்சுப் பட்டறை. கருமான் வேலை செய்யும் இடம் கருமான் பட்டறை. தச்சன் மரச் சாமான்களும், கருமான் இரும்புச் சாமான்களும் செய்து கொடுக்

கிறுர்கள். மற்றத்தொழில்களில் மிகவும் முக்கியமானது நெசவுத் தொழில். இவ்வேலை செய்யப்படும் இடத்தை நெசவுத்தொழிற்சாலை என்கிறேம். நெசவுத்தொழில் பெரும்பாலும் செங்குந்தர் வகுப்பினராலேயே செய்யப்படுகிறது. கிராமங்களில் இவற்றைத் தவிர, மற்றத் தொழிற்சாலைகள் ஏற்படுவது அரிது.

நெல் பயிர் விசேஷமான கிராமங்களில் நெல் குத்தும் தொழிற்சாலைகள் ஏற்படுகின்றன. கரும்பு விசேஷமாகக் கிடைக்கும் இடமாக இருந்தால், அங்குக் கரும்புச்சாலையும், வெல்லம் அல்லது சர்க்கரை செய்யும் சாலையும் ஏற்படுகின்றன. பருத்தி அதிகம் விளையும்இடங்களில், பருத்திக்கொட்டை எடுப்பதும், பருத்திப் பேல் கட்டுவதும் ஆகிய தொழிற் சாலைகள் ஏற்படுகின்றன. நிலக்கடலை விசேஷமாகப் பயிராகும் இடங்களில், நிலக்கடலையைத் தோல் நீக்கும் தொழிற்சாலைகள் ஏற்படுகின்றன. இவ்வாறு, கிராமங்களின் முக்கியப் பொருள்களுக்கு ஏற்றவாறு தொழிற் சாலைகள் ஏற்படுவது இயல்பே.

பயிற்சி

1. உன் கிராமத்தில் முக்கிய விளைபொருள் என்ன?

2. அதற்காக ஏற்பட்டுள்ள தொழிற்சாலைகள் எவை?

3. உன் கிராமத்தில் உள்ள தொழிற் சாலைகளைக் காட்டும் பட்டி ஒன்று தயார் செய்.

4. கருமான் பட்டறையும், தச்சப் பட்டறையும் உன் கிராமத்தில் எத்தனை இருக்கின்றன?

5. நெசவுத் தொழில்சாலை உன் கிராமத்தில் உண்டா?

15. கிராமத்தில் வாழும் ஜனங்கள்

நம் கிராமங்களில் விவசாயமே முக்கியத் தொழில் என்றேம். அநேகமாக விவசாயிகள் எல்லோரும் ஹிந்துக்களே. ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு ஹிந்து கோவில் இருக்கும். இவர்கள் கோவிலில் ஹிந்து தெய்வங்களைத் தொழுகின்றனர். இவர்கள் மதம் ஹிந்து மதம். கிராமங்களில் வியாபாரம், தையல் வேலை இவை போன்ற தொழில் செய்பவர்கள் முகம்மதியர்களே. இவர்களில் சிலர் விவசாயத் தொழிலும் நடத்துவது உண்டு; சிலர் துணி நெய்தல், பாய் நெய்தல் முதலிய தொழில்களையும் செய்பவர். இவர்கள் கூலி ஆட்களைக் கொண்டே பயிர்த் தொழிலைச் செய்வது வழக்கம். இவர்கள் மதம் முகம்மதிய மதம். இவர்கள் கோவிலுக்கு மசூதி என்பது பெயர். கிராமங்களில் ஆங்காங்குச் சிற்சில கிறிஸ்தவர்களும் இருக்கின்றனர். இவர்கள் மதம் கிறிஸ்தவமதம். இவர்கள் கோவிலுக்கு மாதாகோவில் என்பது பெயர்.

நம் கிராமங்களில் பேசப்படும் பாஷைகள் தமிழும், தெலுங்கும். சில ஜில்லாக்களில் தமிழும், மற்றும் சில ஜில்லாக்களில் தெலுங்கும் அதிகமாகப் பேசப்படும். சர்க்கார் பாஷையாகிய இங்கிலீஷ் பலரால் பேசப்படுகிறது.

பயிற்சி

1. உன் கிராமத்தில் வாழும் ஜனங்கள் எவ்வகுப்பினர்? அவர்கள் பேசும் பாஷை என்ன?



சேலம் ஜில்லா—இயற்கை அமைப்பு

இரண்டாம் பாகம்

சேலம் ஜில்லா

1. பொதுத் தோற்றம்

பிள்ளைகளே, நீங்கள் இதுவரையிலும் கிராமங்கள், பட்டணங்கள் இவை எவ்வாறு அமைகின்றனவென்றும், அவ்விடங்களில் ஜன வாழ்க்கை எவ்வாறு நடை பெறுகின்றதென்றும் படித்து வந்தீர்கள். மேலும் பல பொது விஷயங்களையும், பூகோள விவரங்களையும் தெரிந்து கொண்டீர்கள்.

முதல் பாகத்தில் இந்தியா நமது நாடு என்பதும், அதில் நம் ஜில்லா இருப்பது சென்னை இராஜதானி என்பதும்கூட நீங்கள் படித்திருக்கிறீர்கள். நாம் இந்தப் பாகத்தால் நம் சேலம் ஜில்லாவைப்பற்றிய பூகோள விவரங்களைத் தெரிந்து கொள்வோம்.

நாம் வசிக்கும் இந்த ஜில்லாவுக்குச் சேலம் ஜில்லா என்னும் பெயர் எவ்வாறு ஏற்பட்டது. வடமொழியில் சைலம் என்பதற்கு மலை என்பது பொருள். சேலம் என்னும் பட்டணத்திற்குச் சமீபத்தில் பல குன்றுகளும், மலைகளும் ஆங்காங்குச் சிதறிக் கிடப்பதால், இந்த ஜில்லாவுக்கே இப்பெயர் ஏற்பட்டதென்று சிலர் சொல்லுகின்றனர். இது சேர அரசர் ஆண்டுவந்த இடம். ஆகையால், இவ்வூருக்குச் சேரலம் என்னும் பெயர் ஏற்பட்டு, அது நாளடைவில் சேலம் என மாறிற்று என்று மற்றுஞ் சிலர் கூறுகின்றனர்.

சேலத்தின் வடக்கில் சுமார் 5 மைல் தூரத்தில் ஓர் உயரமான மலை இருப்பதைப் படத்தில் பாருங்கள். இதற்குச் சேர்வராயன்மலை என்பது பெயர். இதன் உச்சியில் ஏறிச்சென்று ஜில்லாவின் பொதுத் தோற்றம் எவ்வாறு இருக்கிறது என்பதைப் பார்த்து வருவோம். சேலத்திலிருந்து நேர் வடக்காக 5 மைல் சென்றால் மலையின் அடிவாரத்தை அடைகிறோம். இங்கிருந்து ஒரு பாதை மலைமீது சுற்றிச் சுற்றிப் போகிறது. மலை அடிவாரத்தில் இருக்கும் கிராமத்திற்குக் கண்ணன் குறிச்சி என்பது பெயர். மலைமீது விளையும் பொருள்களை இங்கே கொண்டுவந்து வியாபாரம் செய்கிறார்கள். அப்பொருள்களில் காப்பி முக்கியமானது. மலை மீது செல்லும் பாதை பல பள்ளத்தாக்குகளின் வழியாகவும், காடுகளின் மூலமாகவும் போடப்பட்டுள்ளது. வழியில் பல சிறு கிராமங்கள் இருக்கின்றன. இம் மலைமீது பழ வர்க்கங்கள் விசேஷமாக விளைகின்றன.

வெகுதூரம் சென்றபின் ஒரு பீடபூமிப் பிரதேசத்தின்மீது ஏர்க்காடு என்னும் பட்டணம் போய்ச் சேருகிறோம். இது கடல் மட்டத்திலிருந்து 4500 அடி உயரத்தில் இருப்பதால் மிகவும் குளிர்ச்சியாய் இருக்கிறது. இங்கே பல ஐரோப்பியர் வசிப்பதை நாம் காணலாம். அவர்களில் சிலர் இங்கே குளிர்ச்சியாய் இருப்பதால் தேக சுகத்திற்காக வந்து தங்குகின்றனர். மற்றும் சிலர் காப்பித் தோட்டங்களை வைத்துப் பயிர் செய்து வருகின்றனர். இந்தப் பட்டணம் மலைமீது காடு

கள் அடர்ந்த பாகத்தில் ஓர் ஏரியின் பக்கத்தில் இருக்கிறபடியால் இதற்கு ஏரிக்காடு என்று பெயர் வந்தது. இது நாளடைவில் ஏர்க்காடு என்று மருவிவிட்டது. ஏர்க்காட்டில் வெப்ப நிலை மிகவும் தணிந்திருப்பதால் கோடையில் இங்கே தங்குவதற்குப் பலர் வருவதும் உண்டு.

ஏர்க்காட்டிற்குச் சிறிது தெற்கில் இம்மலையின் மிக்க உயரமான பாகம் இருக்கிறது. இங்கு நிலமட்டம் 4700 அடி உயரமாகும். இந்த ஜில்லாவிலேயே இதுதான் மிகவும் உயரமான பாகம். மப்பு மந்தாரம் இல்லாமல் ஆகாயம் தெளிந்திருக்கும் நாளில் நாம் இதன் உச்சியில் நின்று பார்த்தால், ஜில்லாவின் பொதுத் தோற்றம் எப்படி இருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

சேர்வராயன் மலை உச்சியிலிருந்து பார்ப்போம். முதலில் வடக்கில் கவனிப்போம். நெடுந்தூரத்தில், சற்றேறக்குறைய நமது ஜில்லாவின் வட எல்லைக்குச் சமீபத்தில் ஒரு மலையும், வட கிழக்கில் சில மலைகளும் காணப்படுகின்றன. நேர் வடக்கில் இருப்பது அங்குசகிரி. வடகிழக்கில் இருப்பது மகாராஜ கடைமலை. வட மேற்கில் மிகவும் மேடான பாகம் இருக்கிறது. இங்குப் பல மலைகள் காணப்படுகின்றன. இவைகளில் முக்கியமானது மேலகிரி. இம்மலைக்கு ஒரு புறம் காவேரியும், மற்றொரு புறம் சனத்குமார நதியும் ஓடுகின்றன. மேலகிரி இவ்விரு நதிகளையும் பிரித்துவிடுகிறது. மேற்கூறிய இரண்டு நதிகளுக்கும் மத்தியில் மார்க்கண்ட நதி ஓடுகிறது.

இவைகளுக்குத் தெற்கில் நிலத்தின் உயரம் குறைந்து விடுகிறது. கிழக்கில் திரும்பிப் பார்ப்போம். காடுகள் அடர்ந்த ஒரு மலை காணப்படுகிறது. அது தான் கல்ராயன் மலை. அது தவிரப் பல சிறு குன்றுகளும் நாம் நிற்கும் சேர்வராயன் மலைக்குச் சமீபத்தில் இருக்கின்றன.

தெற்கிலும், தென் மேற்கிலும், தென் கிழக்கிலும் நிலம் படிப்படியாக வாட்டமாய் இருப்பது நம் கண்களுக்குப் புலப்படுகிறது. தென் மேற்கில் சமவெளி மத்தியில் சங்ககிரி இருக்கிறது. தென் கிழக்கில் பச்சை மலையும், தெற்கில் கோல்லி மலையும் காணப்படுகின்றன. இந்தப் பாகங்களில் பல ஆறுகள் ஓடுவதால், ஆங்காங்குச் செழிப்பான நிலங்களும் தோன்றுகின்றன.

இனி நாம் ஜில்லாவின் பல பாகங்களையும் நேரில் சென்று பார்த்து வருவோம்.

பயிற்சி

1. சேர்வராயன் மலைமீதுள்ள பட்டணம் எது? அதற்கு அப்பெயர் ஏன் கொடுக்கப்பட்டது?
2. சேர்வராயன் மலையிலிருந்து நாம் பார்க்கக் கூடிய தோற்றத்தைச் சுருக்கமாகச் சொல்.

2. சேலம் நகரக் காட்சி

இன்று நாம் சேலத்தைச் சுற்றி வருவோம். முதலில் செவ்வாய்ப் பேட்டைக்குப் போகலாம். இந்தப் பேட்டைக்கு ஏன் செவ்வாய்ப் பேட்டை என்னும் பெயர் வந்தது தெரியுமா ? இங்கே செவ்வாய்க்கிழமை தோறும் ஒரு பெரிய சந்தை கூடுகின்றது. ஆகையால், இதைச் செவ்வாய்ப்பேட்டை என்று வழங்குகின்றனர். இன்னும் இங்கே சந்தை கூடுகிறது. இன்று இங்கு சந்தைகூடும் நாள். சந்தையில் ஜனங்கள் திரள் திரளாய்க் கூடியிருக்கிறார்கள். பல கிராமங்களிலிருந்தும் குடியானவர்களும்

மற்றவர்களும் வந்திருக்கிறார்கள். இங்கே தான்ய வியாபாரம் விசேஷமாய் நடை பெறுகிறது. சேலத்தைச் சுற்றிலும் பயிராகும் எல்லா வித தான்யங்களும், விளை பொருள்களும் இங்கே விற்பனைக்கு வருகின்றன. சந்தை நாள் தவிர மற்ற நாட்களிலும் கூட இங்கே வியாபாரம் அதிகந்தான். இங்கே பெருத்த வியாபாரத்தை நடத்திவரும் வியாபாரிகளின் சௌகரியத்திற்காக லேக் பஜார் என்னும் கடை வரிசைகள் கட்டப்பட்டு உள்ளன. இவைகளுக்குச் சமீபத்தில் சேலம் மார்க்கெட்டு இரயில்வேஸ்டேஷன் இருக்கிறது. இந்தப் பேட்டையில் ஒரு பஞ்சாலையும் ஏற்பட்டு உள்ளது.

குகை என்னும் பாகத்தைப் பார்த்து வருவோம். இந்தப் பேட்டையில் நெசவுத்தொழில் அதிகமாக நடை பெறுகிறது. இங்கே தெருவில் போய்க் கொண்டிருக்கும்போதே தறிகளில் நெசவு செய்யும் சத்தம் கேட்கிறது. சில இடங்களில் ஜனங்கள் பாவு ஓடிக்கொண்டு இருக்கிறார்கள். இங்குத் தேவாங்கர் என்னும் குலத்தார் அதிகமாய்க் குடியிருக்கின்றனர். அவர்களுடைய முக்கியமான தொழில் நெசவுத் தொழில். அவர்கள் பேசும் பாஷை தெலுங்கு.

சேலத்தின் கிழக்கில் உள்ள அம்மாப் பேட்டையிலும் இவ்வாறே நெசவுத்தொழில் விசேஷமாக நடைபெறுவதை நாம் காண்கிறோம்.

சேலத்தில் ஜனத்தொகை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வந்தபடியால் பட்டணத்தில் ஜன நெருக்கம் ஏற்பட்டது. ஆகையால், நகரத்தை விசாலமாக்கி வீடு கட்டிக்கொள்ள வேண்டியதாயிற்று. சிவசுவாமி புரமும், ஹஸ்தம்பட்டியும் இவ்வாறு புதியனவாக ஏற்பட்ட பாகங்கள். இந்தப் பாகங்களில் தனவந்தர்களும், உத்தியோகஸ்தர்களும் பங்களாக்களைக் கட்டிக்கொண்டு இருக்கின்றார்கள்.

சேலத்தின் மத்தியில் மணிமுத்தாறு ஓடுகிறது. இவ்வாற்றில் மழை காலத்தில் தவிர மற்ற நாட்களில் ஜலம் ஓடுவதில்லை. இதற்கு இடப்புறமாக இருக்கும் பாகத்திற்குக் கோட்டை என்பது பெயர்.

கடைத் தெருவைச் சுற்றிப்பார்த்து வருவோம். மாலையில் நூற்றுக்கணக்கான நெசவுத்தொழில் செய்பவர்கள் தாங்கள் நெய்த துணிகளை விற்பனைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். பழங்கள் விற்கும் கடைகளில் சென்றால் மாம்பழமும், சீனிப் பழமும் அதிகமாக இருப்பதைப் பார்க்கிறோம். இவைகளைக் கடந்து சென்றால் மளிகைக் கடைகள் இருக்கின்றன. இரட்டை மாட்டு வண்டிகளில் அச்சு வெல்லம் கொண்டு வந்து இறக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். சேலம் அச்சு வெல்லத்திற்குப் பெயர் பெற்றது.

இந்நகரத்திலுள்ள பல உத்தியோக சாலைகளையும், கல்விச் சாலைகளையும் பார்த்து வருவோம். சேலம் டவுன் ஸ்டேஷனுக்கு வடக்கில் மணிக்கூண்டுடன் தோன்றுவது முனிசிபல் கல்லூரி. மணிமுத்தாற்றுப் பாலத்திற்குச் சமீபத்தில் கலெக்டர் கச்சேரி, கோர்ட்டுகள், ஆஸ்பத்திரி, முனிசிபல் ஆபீசு முதலியன இருக்கின்றன.

இவ்வளவு பெரிய நகரத்தில் சுத்த ஜலம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால், முனிசிபாலிடியார் பனமரத்துப் பட்டியிலிருந்து நீர் கொண்டு வருகின்றனர். இப்பொ



மேட்டூர் அணை

ழுது, மேட்டூர் அணையித் தேக்கத்திருந்து, இந்த ஜில்லாவுக்கு குடிஜலம் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது?

இந்நகரத்தின் வழியாகத் தென்இந்திய இருப்புப்பாதையின் இருபிரிவுகள் செல்கின்றன. ஒன்று சென்னையிலிருந்து மேற்குக்கரை நாடுகளுக்குச் செல்லும் அகலமான பாதை. மற்றொன்று விருத்தாசலத்திலிருந்து வரும் குறுகிய பாதை. இவை சூரமங்கலத்தில் சந்திக்கின்றன.

சேலத்தில் மாந்தோப்புகளும், பலவிதச் செடிகளை வியாபாரத்திற்காக வளர்க்கும் தோட்டங்களுமே மிகவும் அதிகம். இவ்வூரிலிருந்து நாள்தோறும் நூற்றுக்கணக்கான மாங்கன்றுகளும், மற்றச் செடி வகைகளும் வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

பயிற்சி

1. சேலம் பட்டணத்தின் படத்தை உத்தேசமாக வரைந்து, அதில் செவ்வாய்ப்பேட்டை, குகை, அம்மாபேட்டை, சிவசுவாமிபுரம், ஹஸ்தம்பட்டி, சூரமங்கலம், இவைகளைக் குறிப்பிடு.
2. சேலத்திற்கு வெளியூர்களிலிருந்து வருவோர் வாங்கிச்செல்லக்கூடிய முக்கியமான இரண்டு பொருள்களைக் கூறுக.
3. இந்தப்பட்டணத்திற்குக் குடிப்பதற்குச் சுத்த ஜலம் எங்கிருந்து வருகிறது? ஏன்?
4. இப்பட்டணத்தின் நடுவில் ஓடும் ஆறு எது?

3. மேட்டூர் அணைக்காட்சி

நாம் சேலம் பட்டணத்தைச் சுற்றிப் பார்த்து விட்டோம். இன்று மேட்டூர் அணையைப் பார்த்து வருவோம். அதற்குச் சேலத்திலிருந்து ஓமலூர் வழியாகப் போகவேண்டும். தென் இந்திய இருப்புப்பாதையின் கிளை ஒன்று மேட்டூர் வரையில் போகின்றது. நாம் அந்த வழியாகப் போனால் ஓமலூர் அடைகிறோம். நாம் போகும் வழியில் பல சிறிய குன்றுகள் காணப்படுகின்றன. இவைகளில் சிதைந்துபோன கோட்டைகள் காணப்படுகின்றன. அக்கோட்டைகள் முற்காலத்தில் இந்து அரசர்களால் கட்டப்பட்டவை. முக்கியமாக அவைகளை விஜயநகர அரசர்களும், அமரகுந்தியில் ஆண்டு வந்த கெட்டி முதலியார்களும் கட்டிவைத்தார்கள். ஆங்காங்குப் பருத்தி, கரும்பு, துவரை, கொள்ளு, மிளகாய், புளி ஆகிய விளை பொருள்கள் பயிராவதை நாம் பார்க்கலாம்.

காவிரி ஆறு சமீபத்தில் இருந்துங்கூட இங்கு ஏன் நன்செய்த் தானியம் பயிர் செய்வதில்லை தெரியுமா? காவிரி பள்ளத்தாக்கில் இருப்பதாலும், ஆங்குள்ள நிலம் மேட்டுப்பாங்காய் இருப்பதாலும், அதில் ஓடும் ஜலம் பயிர்த் தொழிலுக்குப் பயன்படாமல் இருக்கிறது.



சேலம் ஜில்லா—சாலைகளும் இருப்புப்பாதையும்

ஓமலூரில் கல் சட்டிகள் செய்கிறார்கள். இவ்வூரைக் கடந்து 6 மைல் தூரம் சென்றால், தாரமங்கலம் என்னும் பெரிய கிராமம் இருக்கிறது. இங்கே நாம் அழகிய கோயில்களைப் பார்க்கிறோம். இந்தக் கோயில்களில் தச்சவேலை எவ்வளவு நேர்த்தியாகச் செய்யப்பட்டு உள்ளன பாருங்கள்.

இந்தக் கிராமங்களைக் கடந்து சென்றால், நாம் மேட்டூர் போய்ச்சேருகிறோம். இப்பொழுது நாம் நமது ஜில்லாவின் எல்லைக்கு வந்து விட்டோம். நமது ஜில்லாவிற்கும், கோயமுத்தூர் ஜில்லாவிற்கும் இங்கே காவிரியாறு எல்லையாய் அமைந்து இருக்கிறது.

மேட்டூரில் காவிரியில் ஒரு பெரிய அணை கட்டி இருப்பதைப் பார்க்கிறோம். இது எவ்வளவு உயரமாயும் நீளமாயும் இருக்கிறது பாருங்கள். இதோ இருக்கும் ஏரி இந்த அணை கட்டி இருப்பதால் உண்டானது. ஆற்றில் வெள்ளம் வருங்காலத்தில் இந்த காவிரியில் ஜலத்தைத் தேக்கி பின்னர் அதை நிதானமாக ஆற்றில் விடுவார்கள். இதனால் காவிரியின் ஜலத்தைப் பயிர்த் தொழிலுக்கு உபயோகிக்கும் நிலங்களுக்கு அனுகூலம் உண்டு. அணையைப் பார்த்துவிட்டுச் சேலத்திற்குத் திரும்பிப் போகலாம். இங்கு மின்சாரம் உண்டாக்கப்படுகிறது. இங்கு இவ்வணை ஏற்பட்டதன் பயனைச் சேலத்துக்குக் குடி நீர் வசதி ஏற்பட்டது.

பயிற்சி

1. சேலத்திலிருந்து மேட்டூருக்குப் புதிதாக ஓர் இருப்புப் பாதையை அமைத்திருக்கிறார்கள். இதை அமைத்ததற்குள்ள முக்கியமான காரணததை யோசித்துக் கூறுங்கள்.

2. ஓமலூர் செல்லும் வழியில் என்னென்ன தான்யங்கள் பயிராவதை நீங்கள் பார்த்தீர்கள்?

3. காவிரியில் ஏராளமான ஜலம் பாய்ந்தும் அதை அடுத்துள்ள ஓமலூர் தாலூக்காவில் புன்செய்த் தான்யங்கள் பயிராகின்றன. ஏன்?

4. ஹொகனகல் நீர்வீழ்ச்சியின் காட்சி

நேற்று மேட்டூர் அணையைப் பார்த்து வந்தோம். இன்று காவேரியில் ஏற்பட்டுள்ள மற்றோர் அதிசயத்தைப் பார்த்து வருவோம். ஹொகனகல் என்னும் இடத்தில் காவிரியும், சனத்குமாரி நதியும் சந்திக்கின்றன. இச்சந்திப்புக்குச் சமீபத்தில் காவேரி 84 அடி உயரத்திலிருந்து விழுகிறது. அதைப் பார்த்து வரலாம்.

சேலத்திலிருந்து மோட்டார் பஸ்ஸில் ஏறிக்கொண்டு வடக்கு நோக்கிச் செல்லும் பாதையாகப் போகலாம். நேற்று நாம் ஓமலூர் சென்ற இருப்புப்பாதையை ஒட்டியே இந்தச் சாலையும் செல்வதைக் கவனியுங்கள். ஓமலூர் வரையிலும் வடமேற்காகச் சென்ற பாதை அவ்வூரைக் கடந்ததும் நேர் வடக்காகத் திரும்பிவிடுகிறது. தோப்பூர் ஆற்றைக் கடந்த பிறகு சாலையின் இருபுறங்களிலும் இருக்கும் நிலங்களில் எள் பயிராவதை நாம் பார்க்கிறோம்.

அதமன் கோட்டை என்னும் ஊரில் பாதை பிரிந்து விடுகிறது. ஒரு கிளை வடகிழக்காகக் கிருஷ்ணகிரித் தாலுக்காவுக்கும் மற்றொன்று நேர் வடக்காகவும், வடமேற்காகவும் ஹொசூருக்கும் செல்கின்றன. அதமன் கோட்டையில் பாழடைந்த ஒரு கோட்டை இருக்கிறது. ஏன் இந்தக் கோட்டையைக் கட்டினார்கள்? இந்த ஊருக்குச் சமீபத்தில் தோப்பூர் என்னும் இடத்தில் ஒரு கணவாய் இருக்கிறது. உயரமான மலைகளுக்கு நடுவில் போக்கு வரவுக்கு அனுகூலமாகும்படி ஏற்பட்டிருக்கும் பள்ள

மான வழிக்குக் கணவாய் என்பது பெயர். முற்காலத்தில் இக்கணவாயின் வழியாக விரோதிகள் வராமல் தடுப்ப தற்காக அதமன்கோட்டை கட்டப் பட்டது. இது கணவாயின் தலைப்பில் இருப்பதால் இங்கும் பல பாதைகள் கூடுகின்றன. வடகிழக்காகச் செல் லும் கிளைப் பாதையில் போனல் அதமன் கோட்டையிலிருந்து 43 மைல் போனதும் தர்மபுரி என்னும் ஊர் இருக்கிறது. இவ்வூரின் வழி யாக ஓர் இருப்புப்பாதை செல் கிறது. அவ்விருப்புப்பாதை மொரப் பூரிலிருந்து ஹோசூர் போகிறது. இவ்வூரை நாளைய தினம் பார்க் கலாம்.

அதமன்கோட்டையிலிருந்து நேர் வடக்காகச் செல்லும் சாலையில் சிறிது தூரம் சென்றதும் தர்மபுரியிலிருந்து மேற்கு முகமாகப் போகும் சாலை வந்து கூடுகிறது. நாம் இந்தப் பாதையின் வழியாய் மேற்கு முகமாகச் சுமார் 20 மைல் போனபிறகு ஹொ கனகல் போய்ச் சேருகிறோம். இவ் வூருக்கு அருகில் சனத்குமாரி என் னும் ஆறு காவிரியுடன் கலக்கிறது. இங்கே காவிரியில் ஸ்நானம் செய்து வரலாம். அதோ பாருங்கள், காவிரி உயரத்திலிருந்து விழுகின் றது. ஜலம் உயரத்திலிருந்து விழும் போது எவ்வளவு அழகாய் இருக் கிறது பாருங்கள். ஆற்றங்கரை ஓர மாகப் போகலாம். சிறிது தூரம் போனதும் ஆறு மறுபடியும் ஒரு சிறிய பள்ளத்தில் விழுந்து ஓடு வதைப் பாருங்கள். இந்த இடத்திற் குப் பிரம்ம யாக குண்டம் என்பது பெயர். இங்கே பிரமன் யாகம் செய்த தாகச் சொல்லப்படுகிறது. எத்தனை பேர் ஹொகனகல் நீர் வீழ்ச்சியில் ஸ்நானம் செய்கிருர்கள் பாருங்கள். இங்கே ஸ்நானம் செய்வதால் புண்ணியம் உண்டாகும் என்று இந்துக்கள் நினைக்கிருர்கள். நீர் வீழ்ச்சியில் நீர்த்துளிகள் புகை போலப் பறப்பதைப் பார்த்தீர்களா? புகைபோலக் காணப்படுவதாலே தான் இதற்கு ஹொகனகல் என்னும் பெயர் வழங்குகிறது. (ஹொகே— என—கல்லு என்னும் கன்னட வார்த்தைக்குப் புகை போன்ற இடம், என்பது பொருள்) இங்கு இன்று தங்கி நாளை சேலம் போகலாம்.

பயிற்சி

1. அதமன் கோட்டையில் கோட்டை கட்டி இருப்பதேன்?

2. ஹோகனகல்லில் காவிரியுடன் கலக்கும் நதி யாது?

5. திருச்செங்கோட்டுக் காட்சி

இன்று நாம் திருச்செங்கோட்டை யும் அதன் அருகில் உள்ள ஊர் களையும் பார்த்து வருவோம். சூரமங்கலத்தில் உள்ள சேலம் ஜங் ஷனில் வண்டியேறி மேற்கு முக மாகப் போகிறோம். இங்கு நிலம் ஓமலூர் பாகத்தில் இருப்பதைவிட உயரம் குறைந்து இருக்கிறது. ஜல வசதியும் இருக்கிறபடியால் இங்கே புகையிலை நன்றாய்ப் பயிராகிறது.

சங்கரி துர்க்கம் ஷ்டேஷனில் இறங் கித் தெற்கு முகமாகச் சாலையில் பிர யாணம் செய்தால், திருச்செங்கோடு என்னும் இடத்தை அடைகிறோம். இது பெரிய கிராமம். இதை ஒரு சிறிய பட்டணம் என்றும் சொல்ல லாம். இவ்வூரில் உள்ள மலையின் மீது கோயில் இருக்கிறது. உயர மான சிகரத்தின்மீது உள்ளது உச்சிப் பிள்ளையார் கோவில். இம்மலையின் ஒரு சிறிய குன்றான பாகத்தில் இருப்பது பாடல்பெற்ற சிவன்

கோயில். இங்கு உள்ள சிவபெருமானே அர்த்தநாரீசுவரர் என்று வழங்குவார்கள். இங்குள்ள மலைக்கு நாககிரி என்பது பெயர். இவ்வூரிலிருந்து நாமக்கல்லுக்கு ஒரு சாலை செல்லுகிறது.

சங்கரி ஸ்டேஷனுக்கு வடக்கில் சங்கரி துர்க்கம் இருக்கிறது. இம்மலை சங்கு வடிவமாயிருப்பதால் இதற்குச் சங்ககிரி என்னும் பெயர் ஏற்பட்டதாம். இவ்வூரில் சுனைகள் என்னும் பல நீர் ஊற்றுகள் இருக்கின்றன. அவைகளில், அநேகம் வியாதிகளைப் போக்கக்கூடிய நல்ல ஜலம் இருப்பதால் அவைகளில் ஸ்நானம் செய்யப் பல ஜனங்கள் அடிக்கடி வருகின்றனர்கள். அந்தச் சுனைகளில் மான் சுனை முக்கியமானது. இஃது எல்லாப் பக்கங்களிலும் பெரும்பாறைகளால் சூழப்பட்டு இருக்கிறது. இம்மலையின் மீது பத்துச் சிறிய கோட்டைகள் இருக்கின்றன.

சரபங்க நதியைக் கடந்து சென்றால் இடைப்பாடி என்னும் கிராமம் வந்து சேருகிறோம். இந்தக் கிராமத்தில் பித்தளைப் பாத்திரங்கள் செய்யும் தொழில் முக்கியமாக நடைபெறுகிறது. சரபங்க நதி மேற்கு முகமாகப் பாய்ந்து காவிரியில் கலக்கிறபடியால், நிலம் இங்கு மேற்குவாட்டமாய் இருக்கிறது என்பது தெரிகிறது.

திருச்செங்கோடு, சங்கரி பாகங்களில் கொங்கு வேளாள ஜாதியினர் அதிகமாய் இருக்கின்றனர்.

பயிற்சி

1. சேலத்திலிருந்து திருச்செங்கோடு போகும்போது நிலத்தின் உயரத்தில் என்ன விசேஷம் காணலாம்?

2. திருச்செங்கோட்டுக்குப்போக எந்த ஸ்டேஷனில் இறங்க வேண்டும்?

3. சங்கரி துர்க்கத்திற்குப் பலர் அடிக்கடிவருவதேன்?

4. இடைப்பாடி எதற்குப் பெயர் போனது?

6. கொல்லி மலைக்காடுகளின் காட்சி

இன்று இந்த ஜில்லாவின் தென் பாகத்தில் உள்ள கொல்லி மலைக் காடுகளையும், தென் கிழக்கிலுள்ள பச்சை மலைக் காடுகளையும் பார்த்து வருவோம்.

சேலத்திலிருந்து நாமக்கல்லுக்குப் போகும் மோட்டார் பஸ் வண்டியில் ஏறி, தென் முகமாக 16 மைல் பிரயாணம் செய்த பிறகு இராசிபுரம் போய்ச் சேரலாம். வழி நெடுக இருபுறங்களிலும் புளியமரங்கள் விசேஷமாய்க் காணப்படுகின்றன. சாலையின் பக்கங்களில் உள்ள நிலங்களில், சோளமும், நிலக்கடலையும், வெங்காயமும் பயிராவதைப் பாருங்கள். இராசிபுரத்தில் நாட்டுச் சர்க்கரை ஆலைகள் பல காணப்படுகின்றன. இங்கே வெல்லம் உற்பத்தி செய்யப்படுகிறது. அச்சு வெல்லம் செய்வது இவ்வூரில் நடைபெறும் தொழில்களில் முக்கியமானது.

இராசிபுரத்திற்குத் தெற்கில் உள்ள பாகங்களில் கரும்பு விசேஷமாகப் பயிர் செய்கிறார்கள். இராசிபுரத்தில் பித்தளைப் பாத்திரங்கள் செய்தல், நெசவு நெய்தல் ஆகிய தொழில்களும் நடைபெறுகின்றன.

இவ்வூருக்குக் கிழக்கில் 6 மைல் தூரத்தில் உள்ள நாமகிரிப் பேட்டைக்குப் போகலாம். இங்கே பல இரும்புப் பட்டறைகள் இருக்கின்றன பாருங்கள். இவ்வூருக்குச் சமீபத்தில் நல்ல இரும்பு கிடைக்கிறது.

நாம் மறுபடியும் இராசிபுரம் சென்று, அங்கிருந்து நாமக்கல் போவோம். இராசி புரத்திலிருந்து

நாமக்கல் போகும் பாதையில் உள்ள நிலங்களில் கரும்பு, நெல், பருத்தி முதலியன பயிராவதைப் பாருங்கள்.

நாமக்கல் ஒரு பெரிய ஊர். இங்கே ஒரு கோயில் இருப்பதைப் பாருங்கள். இதற்குச் சமீபத்தில் இருக்கும் பெரும்பாறைக் குன்றின்மீது கோட்டை கட்டியிருப்பதைப் பாருங்கள். இக் கோட்டை பல மைல் தூரம் காணப்படுகிறது. கமலாலயம் என்னும் தாமரைக் குளத்தைப் பாருங்கள். இஃது எவ்வளவு அழகாய் இருக்கிறது! மலைமீது உள்ள கோட்டை மிகவும் பலமானது.

நாமக்கல்லுக்குக் கிழக்கில் உள்ள சேந்தமங்கலத்தில் வியாபாரம் அதிகம். இவ்வூரில் நல்ல வேஷ்டிகளும் கிடைக்கின்றன.

நாமக்கல்லைச் கடந்து சென்றால், கொல்லி மலை இருக்கிறது. இம்மலையின்மீது அடர்ந்த காடுகள் இருப்பதைப் பாருங்கள். இந்தக் காடுகளிலிருந்து வரும் வண்டிகளைக் கவனியுங்கள். சிலவற்றில் பெரிய மரங்கள் காணப்படுகின்றன. இவை வீடு கட்டுவதற்கு உபயோகமாகும். மற்றும் சில வண்டிகளில் சிறிய கிளைகளும், வெட்டிய மரமும் இருப்பதைப் பாருங்கள். இவை விறகாக உபயோகம் ஆகின்றன. தழைகளை ஏன் எடுத்துக் கொண்டு போகிறார்கள், தெரியுமா? அவை நிலத்துக்கு எருவாகி, நல்ல செழிப்பைக் கொடுக்கின்றன.

இந்தக் காடுகளில் வேங்கை, கருங்காலி, சந்தனம், மூங்கில் முதலிய மரங்கள் வளர்ந்து இருக்கின்றன. புளிய மரமும் விசேஷமாய் வளர்ந்து இருப்பதைக் கவனியுங்கள். பலர் இங்கே மரங்களின்மீது தேனீக்கள் கட்டியிருக்கும் தேன் கூண்டைப் அழித்து தேன், மெழுகுமுதலியன எடுத்துச் செல்கின்றனர்.

புலி, சிறுத்தை, மான், கரடி, கோனாய் ஆகிய ஜந்துக்கள் இக்காடுகளில் வாழ்கின்றன. ஆகையால் இங்கே தனிமையாகவாவது, இருட்டிலாவது போகக்கூடாது.

கொல்லி மலையை அடுத்து உள்ள பச்சை மலையிலும் இவ்வாறே இருக்கின்றன.

பயிற்சி

1. சேலத்திலிருந்து இராசிபுரம், நாமக்கல், நாமகிரிப்பேட்டை, கொல்லிமலை, பச்சை மலைகளுக்குப் போகும் பாதையைக் குறிப்பிடப் படம் வரைக.
2. இராசிபுரத்தில் நடைபெறும் முக்கியமான தொழில்களைக் கூறுக.
3. நாமகிரிப்பேட்டை எதற்குப் பேர் போனது?
4. காடுகள் இருப்பதால் நமக்கு இலாபம் என்ன?

7. ஆத்தூர்ச் சமவெளிக் காட்சி

நாம் இதுவரையிலும் மேற்கிலும் தெற்கிலும் உள்ள பாகங்களைச் சுற்றிப் பார்த்து வந்தோம். இன்று கிழக்கிலுள்ள ஆத்தூர்ச் சமவெளியைப் பார்வையிட்டு வருவோம். சேலத்திலிருந்து கிழக்கு முகமாக விருத்தாசலம் போகும் இரயிலில் ஏறிக்கொள்வோம். நமது வண்டி போகும்போதே நிலம் படிப்படியாகக் கிழக்கு நோக்கிச் சரிந்திருப்பதை நாம் பார்க்கிறோம். நமக்கு வலப் பக்கத்தில் பச்சை மலை காணப்படுகிறது. வடக்கில் தூரத்தில் காணப்படுவது கல்ராயன் மலை. பச்சைமலை, கொல்லி மலைகளைப்போலக் கல்ராயன் மலையும் காடுகள் நிறைந்தது. இரண்டு மலைகளுக்கும் மத்தியில் இச்சமவெளி இருப்பதால், இதை ஆத்தூர்ப் பள்ளபூமி என்று சொல்லுகிறார்கள்.

இச்சம வெளியின் வடபாகத்தில் கல்ராயன் மலையில் உற்பத்தியாகும் வசிஷ்ட நதியும், தென்பாகத்தில் சுவேத நதியும் ஓடுவதால் இங்கே நல்ல ஜல வசதி உண்டு.

வழியில் இருப்புப் பாதையின்இரு புறங்களிலும் உள்ள நிலங்களில் என்ன தான்யங்கள் பயிராகின்றன என்பதைப் பாருங்கள். அனேக இடங்களில் நெல் பயிராகி இருப்பதைக் காண்கிறோம். சில இடங்களில் புகையிலையும், சோளமும், அவுரியும் கூடப் பயிராகின்றன. நிலக் கடலையும் விசேஷமாகப் பயிரிடுகிறார்கள். இந்தப் பாகத்தில் கமுகு செழிப்பாய் வளர்கிறது.

ஏத்தாப்பூர் என்னும் ஸ்டேஷனில் இறங்கி இதே பெயருள்ள கிராமத்துக்குப் போவோம். ஊர் இரயிலடியிலிருந்து சிறிது தூரத்தில் இருக்கிறது. இங்கே வியாபாரம் அதிகம். ஆத்தூர் என்பது இந்தப் பாதையில் உள்ள பெரிய ஊர். இவ்வூரின் நடுவில் வசிஷ்ட நதி ஓடுவதைப் பாருங்கள். நதியின் இரு கரைகளிலும் ஊர் அமைந்திருக்கிறது. ஆற்றுக்கு வடக்கே உள்ள பாகத்தில் ஒரு கோட்டை இருக்கிறது அல்லவா? இதையும் இந்த ஜில்லாவில் உள்ள மற்றக் கோட்டைகளைப் போலவே கட்டி முதலியார் கட்டினார்கள். இங்கு உள்ள விஷ்ணு கோவிலில் முற்காலத்தில் பொன் சேகரித்து வைத்து இருந்ததாகச் சொல்லப்படும் பெரிய கற்பாறைகள் இருக்கின்றன.

இந்த இருப்புப் பாதையில் தலை வாசல் என்னும் ஸ்டேஷன் இருப்பதைப் பாருங்கள். தலை வாசலுக்குக் கிழக்கில் சமவெளி நிலமும் மேற்கில் மேட்டு நிலமும் இருப்பதை நாம் காண்கிறோம். கிழக்கில் உள்ள சமநிலங்களிலிருந்து மேற்கில் உள்ள மேட்டுநிலப் பாகத்திற்கு செல்லும் வழியில் பச்சை மலை, கல்ராயன் மலைகளுக்கு மத்தியில் இது வழியாக இருப்பதால், இது தலை வாசல் என்னும் பெயர் பெற்றது. தலை வாசலைக் கடந்து சென்றால், தென்னார்காடு ஜில்லாவுக்குப் போய்ச் சேருவோம்.

கங்கவல்லி என்னும் கிராமத்துக்குப் போகலாம். இந்த ஊர் சுவேத நதிக் கரையில் இருக்கிறது. இவ்வாற்றிலிருந்து கால்வாய்களின் மூலமாக நிலங்களுக்கு நீர்பாய்ச்சுவதைப் பாருங்கள். ஆற்று நீர் வசதியுள்ள நிலங்களில் நெல் நன்றாகப் பயிராகும். கங்கவல்லியில் நெல் வியாபாரம் விசேஷமாய் நடைபெறுகிறது.

பயிற்சி

1. ஆத்தூர்ப் பாகத்தை ஆத்தூர்ப் பள்ள பூமி என்று ஏன் சொல்லுகிறார்கள்?

2. சேலத்திலிருந்து விருத்தாசலம் போகும் இருப்புப் பாதையைப் படத்தில் காட்டி, இதில் ஏத்தாபூர், ஆத்தூர், தலை வாசல் ஸ்டேஷன்களைக் குறிப்பிடுங்கள்.

3. தலை வாசல் என்னும் ஊருக்கு அப்பெயர் ஏன் கொடுக்கப்பட்டிருக்கிறது?

4. ஆத்தூர்ச் சமவெளியில் பயிராகும் முக்கிய விளைபொருள்கள் எவை?

8. வடக்கில் உள்ள மலை நாடுகளில் சுற்றுப்பிரயாணம்

இனி நமது ஜில்லாவில் நாம் பார்த்துவராத பாகங்களாகிய வடக்கு மேட்டுப் பூமியையும், மலைகளையும், அங்குள்ள காடுகளையும் பார்த்து வருவோம். சென்னையிலிருந்து சேலம் வழியாக மேற்குக் கரை நாடுகளுக்குச் செல்லும் இருப்புப்பாதையும், இந்த ஜில்லாவில் மோரப்பூர் என்னும் ஜங்ஷன் இருக்கிறது. நாம் சேலத்தி

லிருந்து மொரப்பூர் சென்று, அவ் விடத்திலிருந்து ஹோசூர் செல்லும் வண்டியில் மாறிப் புறப்படுவோம்.

மொரப்பூர்விட்டு இரயில்வண்டி மேற்கு முகமாகச் செல்கிறது. முதலில் நாம் பிரயாணம் செய்யும் பாகத்தில் கேழ்வரகு (கேப்பு)க் கொல்லைகளும், மொச்சைக் கொல்லைகளும் காணப்படுகின்றன. இவைகளைப் பார்த்துக்கொண்டே போய்த் தர்மபுரியை அடைகிறேம். தோப்பூரிலிருந்து கிருஷ்ணகிரி வழியாக இந்த ஜில்லாவின் வடகிழக்குப் பாகங்களுக்குப் போகும் சாலையும், மொரப்பூரிலிருந்து ஹோசூருக்குப் போகும் இருப்புப்பாதையும் இங்கே சந்திக்கின்றன. தர்மபுரியைச் சுற்றிலும் எள் விசேஷமாக விளைகிறது. இந்த ஊரில் நல்லெண்ணெய், தோல், தானியங்கள் வியாபாரம் மிகுதியாக நடைபெறுவதை நாம் கடைத் தெருக்களில் காண்கிறேம். இங்கு இரண்டு ஆலயங்கள் இருக்கின்றன.

தர்மபுரியை விட்டு ஹோசூரை நோக்கிப்போகும்போது நிலம் படிப்படியாக உயர்ந்து கொண்டே போகிறது. வழியில் உள்ள பாலக்கோட்டில் புளி வியாபாரம் அதிகமாய் நடைபெறுவதையும், அங்கு உள்ள ஏழைகளில் அநேகர் தேங்காய் நார் கொண்டு கயிறு பின்னுவதையும் நாம் பார்க்கலாம்.

ஹோசூரும், அதைச்சுற்றிலும் உள்ள பாகங்களும் மிக உயரமானவை. இங்கே நம் கண்களுக்குப் பல மலைகள் காணப்படுகின்றன. நிலங்களில் புன்செய்த் தானியங்கள் பயிரிடப்படுகின்றன. அவற்றிலும் முக்கியமாகத் துவரை, கொள்ளு இவ்விரண்டும் அதிகம். பாக்கு மரங்கள் எங்கும் விசேஷமாய் வளர்ந்திருப்பதை நாம் காண்கிறேம். இங்கே முசுக்கட்டைச் செடிகளும் வளர்வதால், பட்டுப்பூச்சி வளர்த்தல் விசேஷமாக நடைபெருகிறது. ஹோசூரில் மூங்கில் வியாபாரம் அதிகம். இந்தப் பட்டணத்திற்கு அருகில் உள்ள காடுகளில் மூங்கில் விசேஷமாய் வளர்கிறது. இக்காடுகளில் ஆடு மாடுகள் விசேஷம். ஹோசூரில் கால் நடைப்பண்ணை ஒன்று இருக்கிறது.

நாம் திரும்பிப் போகும்போது இரயிலில் போகாமல் சாலை வழியாக மோட்டார் பஸ்ஸில் ஏறிக்கொண்டு போகலாம். நேராகக் கிருஷ்ணகிரிக்குப் போகலாம். போகும் வழியில் திராக்ஷைப் பழத் தோட்டங்கள் காணப்படுகின்றன. இங்கும் புன்செய்த் தான்யங்களே அதிகமாய்ப் பயிர் செய்வதைப் பார்க்கிறேம். இவ்வூரை அடுத்து உள்ள காடுகளில் மரங்களை எரித்துக்கரியாக்கி, சென்னை முதலிய பெரிய பட்டணங்களுக்கு அனுப்புகிறர்கள். கிருஷ்ணகிரி வழியாகச் சென்னையிலிருந்து பெங்களூர் போகும் சாலை செல்கிறது. இங்கே மலைமீது ஒரு கோட்டை இருக்கிறது. கிருஷ்ணகிரிக்கு வடக்கில் மகாராஜகடை என்னும் ஊருக்குப் போய்ப் பார்ப்போம். இங்கே ஓர் அழகிய கோட்டை இருக்கிறது. இது சிவாஜி மன்னர் கட்டியதாகக் கருதப்படுகிறது.

மறுபடியும் கிருஷ்ணகிரி வந்து, ஹரூர் செல்லும் சாலையில் போகலாம். வழி நெடுகக் காடுகள் அடர்ந்திருக்கின்றன. இங்கே குளிர் ஜுரம் வருமாம். ஆதலால், இங்கு ஜனத்தொகை மிகக்குறைவு. ஹரூரிலிருந்து வாணியாற்றுச் சம நிலத்தின் வழியாகச் சேலம் வந்து சேரலாம்.

பயிற்சி

1. மொரப்பூரிலிருந்து ஹோசூருக்கும், அவ்விடத்திலிருந்து கிருஷ்ணகிரி—ஹரூர் வழியாகச் சேலத்திற்கும் போகும் சாலைகளை ஒரு படத்தில் வரைந்து காட்டுங்கள்.

2. ஹோசூரில் குளிர்ச்சி அதிகமாயிருப்பது ஏன்?

3. கிருஷ்ணகிரியில் விசேஷமாய்க் கிடைக்கும் பழம் எது?

4. ஹரூரில் ஜனத்தொகை குறைவாயிருக்கக் காரணம் என்ன?

9. சேலம ஜில்லாவின் இருப்பிடம்

தென் இந்தியாவின் படம் ஒன்றை எடுத்துக்கொண்டு நமது சேலம் ஜில்லாவின் இருப்பிடத்தைக் கவனியுங்கள். தென் இந்தியாவின் கிழக்குக் கரை ஓரத்திலிருந்து மேற்கு முகமாகச் சென்றால், சமவெளியைக் கடந்ததும் நிலம் மேடாகி வருவதை நாம் காணலாம். அஃது இப்படி மேடாகி வந்து கடைசியாக ஒரு பீடபூமியில் போய் முடிவடைகிறது. இந்தப் பீடபூமியிலேதான் புகழ் பெற்ற மைசூர் ராஜ்யம் இருக்கிறது.

நமது ஜில்லாவுக்கு மேற்கில் கோயம்புத்தூர் ஜில்லா இருக்கிறது. கோயமுத்தூரிலிருந்து சேலத்தைக் காவேரி நதி பிரித்துவிடுகிறது.

வடமேற்கில் நமது ஜில்லா மைசூர் ராஜ்யத்துடன் சம்பந்தப்பட்டு இருப்பதாலே தான் இந்தப் பாகமும் மலைகள் அடர்ந்த பீடபூமியாய் இருக்கிறது.

கிழக்கில் சேலத்தை அடுத்து வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஜில்லாக்கள் இருக்கின்றன. இவ்விரண்டு ஜில்லாக்களும், மேற்கில் இருப்பதைப் போல இயற்கைப் பிரிவால் சேலத்தினின்றும் வேறுபடுத்தப்படவில்லை.

தெற்கில் திருச்சிராப்பள்ளி ஜில்லா இருக்கிறது. சேலம், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களுக்கு மத்தியில் ஒரு பாகத்தில் காவிரியும், மற்றொரு பாகத்தில் பச்சை மலையும் எல்லையாய் அமைந்திருக்கின்றன.

எனவே, சேலம் ஜில்லாவை மைசூர் ராஜ்யத்தைச்சேர்ந்த கோலார், பெங்களூர் ஜில்லாக்களும், சென்னை ராஜதானியைச் சேர்ந்த வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர் ஜில்லாக்களும் சூழ்ந்திருக்கின்றன.

இந்த ஜில்லாவின் எந்தப் பக்கத்திலும் கடற்கரையே இல்லை. ஆகையால், இதை உள்நாட்டு ஜில்லா என்பர். கடற்கரை ஓரமாயிராததனால் இதன் சீதோஷ்ண நிலைமை எவ்விதம் மதிக்கப்படுகிறது என்பதை மற்றொரு பாடத்தில் காண்போம்.

இந்த ஜில்லாவின் விஸ்தீரணம் சுமார் 7,530 சதுர மைல் ஆகும்.

பயிற்சி

1. தென் இந்தியாவின் படமொன்றில் சேலம் ஜில்லாவை மாத்திரம் பச்சை வர்ணம் தீட்டிக் காட்டுங்கள்,

2 நமது ஜில்லாவுக்கு எந்தெந்தப் பாகங்களில் நதி எல்லையாய் இருக்கிறது? அஃது எந்த நதி?

3, சேலம் ஜில்லாவின் படம் வரைந்து, அதன் எல்லைகளைக் குறிப்பிடுக.

10. மேடு பள்ளங்கள்

நாம் இதுவரையில் நமது ஜில்லாவின் பல பாகங்களுக்குச் சென்று பல விஷயங்களை நேரில் பார்த்துத் தெரிந்துகொண்டோம். இப்போது இந்த ஜில்லாவின் பொது விஷயங்களைத் தெரிந்துகொள்வோம்.

நமது ஜில்லாவின் இயற்கை அமைப்புப் படத்தைப் பாருங்கள்.

பொதுவாக இந்த ஜில்லாவின் எந்தப் பக்கம் சரிந்திருக்கிறது என்பதைப் பார்ப்போம். நிலம் எந்தப் பக்கத்தில் மேடாய் இருக்கிறது என்பதை நாம் எப்படி அறிந்துகொள்ளலாம்? ஜலம் மேட்டுப்பாங்கான நிலத்திலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடிவரும் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே? சேலம் ஜில்லாவில் ஆறுகள் ஓடும் திசையைக் கவனியுங்கள்.

காவிரியும், பெண்ணையாறும் தென்முகமாகப் பாய்கின்றன. சில ஆறுகள் மாத்திரம் மேற்குமுகமாகவும், கிழக்குமுகமாகவும் பாய்கின்றன. இச்சிறு ஆறுகளைத் தவிரப் பெரிய ஆறுகள் தெற்கு நோக்கிப் பாய்வதால், இந்த ஜில்லா வடக்கிலிருந்து தென்புறமாகச் சாய்ந்து இருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

சற்றேறக்குறைய இந்த ஜில்லாவின் மத்தியில் ஒரு பெரிய மலை காணப்படுகிறது. அதுதான் சேர்வராயன் மலை. அது சேலம் பட்டணத்திற்குச் சமீபத்தில் இருக்கிறது. அதற்கு வடக்கில் நிலம் மேடாகவும், தெற்கில் உயரம் குறைந்தும் இருப்பதை நீங்கள் படத்தில் பார்க்கலாம்.

இந்த ஜில்லாவின் ஒவ்வொரு மூலையிலும் மலைகள் இருக்கின்றன. இவை ஜில்லாவைக் காப்பதற்காக ஏற்பட்ட கோட்டைகள்போல இயற்கையாய் அமைந்து இருக்கின்றன. இம்மலைகளின்மீது முற்காலத்தில் அரசர்கள் கோட்டைகளைக் கட்டி நாட்டைக் காத்து வந்தார்கள்.

இந்த ஜில்லாவின் முக்கிய ஆறுகள், கோயமுத்தூர் ஜில்லாவுக்கும் இதற்கும் நடு எல்லையாக ஓடும் காவிரியும், ஹோஸூர், கிருஷ்ணகிரி, ஹரூர் தாலூக்காக்கள் மூலம் பாய்ந்து வட ஆர்க்காடில் புகும் தென்பெண்ணையும் ஆகும். இதில் கிருஷ்ணகிரி தாலூக்காவில், பரூர் என்னுமிடத்தில் ஓர் அணை கட்டப்பட்டு இருக்கிறது. இவைகளைத் தவிர வெள்ளாறு, சனத்குமாரி, வசிஷ்டநதி, சுவேதநதி, மணிமுத்தாறு, இவைகள் இந்த ஜில்லாவின் சிறிய ஆறுகள். இவைகளைத் தவிர பல்வேறு ஓடைகளும் இருக்கின்றன.

இயற்கை அமைப்பையொட்டி நமது ஜில்லாவை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்.

அவை, 1. வடக்கிலுள்ள பாலக்கோடு, 2. மத்தியிலுள்ள பாரா மஹால் 3. தென்பாகத்தில் உள்ள தலைக்காடு என்பனவாகும். உயரத்திலும் இவை படிப்படியாக மேற்கூறிய வரிசையாகவே அமைந்து உள்ளன.

1. பாலக்கோடு: இது நமது ஜில்லாவின் மூன்று இயற்கைப் பிரிவுகளில் வடகோடியில் உள்ளது. இதில் ஹோசூர்த் தாலூக்காவும் கிருஷ்ணகிரித் தாலூக்காவில் ஒரு பாகமும் அடங்கி உள்ளன.

2. பாராமஹால்:-இது பாலக்கோடு, தலைக்காடு என்னும் பிரிவினைகளுக்கு மத்தியில் இருக்கிறது. இந்தப் பாகத்தில் தர்மபுரி, ஊத்தங்கரைத் தாலூக்காக்களும், கிருஷ்ணகிரியில் ஒரு பாகமும் அடங்கியிருக்கின்றன.

3. தலைக்காடு:-இது மேற்கூறிய இரண்டு பாகங்களுக்கும் தெற்கில் இருக்கிறது. இதில் சேலம், ஆத்தூர், நாமக்கல், ராசிபுரம், திருச்செங்கோடு ஓமலூர்த் தாலூக்காக்கள் சேர்ந்திருக்கின்றன.

இவை பொதுப் பிரிவுகளாகும். பாலக்கோடு என்ருல், உயரமான மலைகள் என்பது பொருள். தலைக்காடு என்ருல் ஆரம்ப மலைகள் என்பது பொருள். கிழக்குச் சமவெளியிலிருந்து படிப்படியாக ஏற்பட்டிருக்கும் மலை வரிசைகளில் ஆரம்ப வரிசைகளுக்குத் தலைக்காடு என்றும், முடிவான உயரமான வரிசைகளுக்குப் பாலக்காடு என்றும் பெயர்.

பாரா மஹால் என்பது பழைய சுதேச மன்னர்கள் காலத்தில் 12 மாகாணங்கள் அடங்கிய பாகமாய் இருந்தது.

பயிற்சி

1. சேலம் ஜில்லாவின் இயற்கைப் பாகங்கள் எத்தனை? அவை எவை?

2, ஜில்லாப் படத்தில் அதன் இயற்கைப் பிரிவுகளைக் குறிப்பிடுக.

3, பாலக்கோடு, பாரா மஹால், தலைக்காட்டு என்பவை எந்தெந்தப் பாகங்களைக் குறிக்கும்?

4, படத்தைப் பார்த்து இந்த ஜில்லாவில் ஓடும் ஆறுகளையும், அவைகள் ஓடும் திசைகளையும் தெரிந்துகொள்க.

5. ஜில்லாப் படமொன்று வரைந்து, அதில் மலைகளையும் ஆறுகளையும் குறிப்பிடுக.

6. சேலம் ஜில்லாப் படம் ஒன்று களிமண்ணல் செய்து ஆறுகள், மலைகள், இருப்புப் பாதைகள் இவைகளைக் குறிப்பிடுே. ஆறுகளுக்கு நீலக் கோடிட்டு காட்டுக.

11. சீதோஷ்ண நிலையும் மழையும்

சேலம் உள்நாட்டு ஜில்லா என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகையால் பொதுவாக இங்கே கோடையில் வெப்பம் அதிகமாயும், குளிர்காலத்தில் குளிர் அதிகமாயும் இருக்கும். தென்பாகத்தை விட வடபாகம் மேடாக இருப்பதனுல் வடபாகத்தில் உள்ள கிருஷ்ணகிரியிலும், ஹோசூரிலும் கோடையில் வெப்பம் அதிகமாகத் தோன்றும். ஹோசூரில் கோடையில் பெங்களூரைப்போலக் குளிர்ச்சியாய் இருக்கும்.

சேலத்துக்கு வடக்கில் உள்ள சேர்வராயன் மலைமீது கோடையில் குளிர்ச்சியாய் இருக்கும். ஆகையால் ஜில்லாவில் உள்ள கனவான்களும், ஆங்கிலேயரும் அம்மலைமீது உள்ள ஏர்க்காட்டில் கோடை காலத்தில் தங்குவது உண்டு.

மேற்குக் கரையிலிருந்தும், கிழக்குக் கரையிலிருந்தும், இந்த ஜில்லா அதிக தூரத்திலிருக்கிற படியால், இங்கு மழை மிகவும் குறைவு. வருஷத்தில் சுமார் 35 அங்குல மழை தான் உண்டு. சில வருஷங்கள் இவ்வளவு மழையும் பெய்யாமல் போய் விடுவதும் உண்டு.

பயிற்சி

1. சேலம் ஜில்லாவில் பொதுவாகக் கோடையில் வெப்பம் அதிகமாயும், குளிர்காலத்தில் குளிர் அதிகமாயும் இருப்பதற்குக் காரணம் என்ன?

2. எந்தெந்தப் பாகங்களில் கோடை வெப்பம் தணிந்திருக்கிறது? ஏன்?

3. கோடையில் சேர்வராயன் மலைக்குப் பலர் செல்வதேன்?

4. இந்த ஜில்லாவில் மழை குறைந்திருப்பதேன்?

12. விளை பொருள்கள்

நாம் முன் பாடங்களில் இந்த ஜில்லாவில் கிடைக்கும் விளைபொருள்களைப் பற்றிப் படித்தோம். ஆயினும் அவைகளை ஒன்று சேர்த்தும், சுருக்கமாகவும் இங்கே படிப்போம்.

நமது ஜில்லாவில் நெல் சிலஇடங்களில் மட்டுமே பயிராகிறது. சேலம், ஆத்தூர், இராசிபுரம், நாமக்கல் தாலூக்காக்களில் அதிகமாகப் பயிர் செய்கிருர்கள். ஓமலூர் தாலூக்காவிலும், மேட்டூர் அணை ஏற்பட்ட



சேலம் ஜில்லா—விளைபொருள்கள்

பின்னர் கொஞ்சம் நெற்பயிர் ஏற்பட்டிருக்கிறது.

சோளம், கம்பு, கேழ்வரகு இவை சேலம், ஆத்தூர், திருச்செங்கோடு, நாமக்கல் தாலுக்காக்களிலும், புன்செய்த் தான்யங்களாகிய கொள்ளு, துவரை முதலியன பாரா மஹால், பாலக்கோட்டுப் பாகங்களிலும், புகையிலை, ஆத்தூர், திருச்செங்கோட்டுத் தாலுக்காக்களிலும், பருத்தி, இராசிபுரம், நாமக்கல் தாலுக்காக்களிலும் அதிகமாகப் பயிர் செய்கிறார்கள்.

சோதுமை, மொச்சை, உளுந்து இவை சேர்வராயன் மலை மீது பயிராகின்றன. அங்குக் காப்பி, இரப்பர்த் தோட்டங்களும் பல உண்டு.

ஜில்லாவின் எல்லாப் பாகங்களிலும் மாஞ்செடிகள் விசேஷம். சேர்வராயன் மலை மீது ஆப்பில், கிச்சிலி, பேரிக்காய் முதலியன கிடைக்கின்றன.

உலோகங்கள்: சேலத்திற்குச் சமீபத்தில் மாக்னசைட்டு என்னும் உலோகமும், நாமகிரிப்பேட்டையில் இரும்பும் கிடைக்கின்றன. சேலத்திற்குச் சமீபத்தில் சுண்ணாம்புக்கல் மலை ஒன்று இருக்கிறது.

பயிற்சி

ஜில்லாவின் படம் வரைந்து அதில் கிடைக்கும் விளைபொருள்களைக் குறிப்பிடுக.

13. வியாபாரமும் கைத்தொழிலும்

இந்த ஜில்லாவில் நெல் விளைவு மிகக் குறைவு. ஆகையால், வெளி ஜில்லாக்களிலிருந்து இங்கு அரிசி கொண்டு வருகிறார்கள். இந்த ஜில்லாவில் அதிகமாய் விளையும் எள்ளு, புளி, கொள்ளு, இவைகளும், நல்லெண்ணெயும் வெளி ஊர்களுக்கு அனுப்பப்படுகின்றன. இங்கு எண்ணெய் ஆலைகள் பல இருக்கின்றன. சேலத்தில் நெய்யப்படும் பலவித பட்டு சரிகை ஜவுளித் தினுசுகளை வெளியூர்களுக்கு அனுப்பி வருகிறார்கள். ஆனால், சீமை ஜவுளி, பித்தளை, இரும்பு முதலியவற்றைத் தருவிக்கிறார்கள். இங்கு மலைப் பிரதேசத்தில் இருக்கும் குறும்பர்கள், ஆட்டு ரோமம் கொண்டு கம்பளம் விசேஷமாக நெய்கின்றனர். குறும்பர் பேசுவது கன்னட பாஷை.

இந்த ஜில்லா வாசிகளில் பெரும்பான்மையோர் விவசாயிகள். துணி நெசவு, கம்பளங்கள் நெய்தல் முதலியன சேலம், தர்மபுரி, ஊத்தங்கரை முதலிய இடங்களில் விசேஷமாக நடைபெறுகின்றன. ஆத்தூர்த் தாலுக்காவில் அவுரி பயிரிடப்படுவதால், அங்கு நீலச்சாயம் தயார் செய்யப்படுகின்றது. இந்த ஜில்லாவில் தென்பாகத்தில் பல இடங்களில் பித்தளை வெண்கலப் பாத்திரங்களும், கல்சட்டிகளும் செய்யப்படுகின்றன. இராசிபுரம், தர்மபுரித் தாலுக்காக்களில் கரும்பு ஏராளமாகப் பயிரிடுவதால் அங்கே வெல்லம் செய்து வெளியூர்களுக்கு அனுப்புகிறார்கள். இவ்விடங்கள் அச்சு வெல்லத்துக்குப் பேர்போனவை.

பயிற்சி

1. சேலம் ஜில்லாவில் நடைபெறும் முக்கியக் கைத் தொழில்கள் யாவை?

2. சேலம் இரயில்வே ஸ்டேஷனில் வெளியூர்களுக்கு அனுப்புவதற்கு வைத்திருக்கும் சரக்குகளிலும், வெளியூரிலிருந்து தருவித்து இறக்கி வைத்திருக்கும் சரக்குகளிலும் முக்கியமானவை மூன்றைக் குறிப்பிடுக.

14 ஜனங்கள், மதங்கள், பாஷைகள்

இந்த ஜில்லாவில் 1931-ம் வருஷம் எடுத்த ஜன சங்கியைக் கணக்கின்படி ஜனத்தொகை 24,33,972 ஆகும் இந்த ஜில்லாவில் சராசரியில் சதுர மைலுக்கு 345 பேர் வசிக்கின்றனர். ஆனால், சில பாகங்களில் ஜன நெருக்கம் அதிகமாயிருக்கிறது. உதாரணமாகச் சேலத்தில் சதுர மைலுக்கு 646 பேரும், திருச்செங்கோட்டில் சதுர மைலுக்குச் சராசரி 580 பேரும் இருப்பதாகக் கணக்கு எடுக்கப்பட்டுள்ளது. சேலம் பட்டணத்தில் மாத்திரம் 102,179 பேர்கள் உண்டு.

ஜனங்களில் பெரும்பான்மையோர் இந்துக்கள் ; ஏறக்குறைய நூற்றுக்கு 95 பேர் இந்துக்களே. நூற்றுக்கு மூன்று பேர் மகம்மதியர்களும், இருவர் கிறிஸ்தவர்களும் இருக்கின்றனர் என்று சொல்லலாம். இந்த ஜில்லாவில் பொதுவாகப் பேசும் பாஷை, தமிழ். ஆனால், சிற்சில இடங்களில் தெலுங்கும் பரவி உள்ளது. இங்குள்ள தேவாங்கர்களுக்குத் தாய் பாஷை தெலுங்கு. மைசூரைச் சேர்ந்த ஹோசூர்த் தாலுக்காவில் பலரால் கன்னடமும் பேசப்படுகிறது.

பயிற்சி

1. சேலத்தில் ஜன நெருக்கடி அதிகமாயிருப்பதற்குக் காரணம் என்ன?

5. சேலம் ஜில்லாவின் படம் வரைந்து, அதில் கன்னடம் பேசும் பாகங்களைக் குறிப்பிடுக,

15 போக்கு வரவுக்குரிய சாதனங்கள்

இந்த ஜில்லாவில் எல்லாம் நில மார்க்கங்களே. ஜல மார்க்கங்கள் இல்லை. சென்னையிலிருந்து மேற்குக் கரை நாடுகளுக்குச் செல்லும் இருப்புப்பாதை இந்த ஜில்லாவில் சாமபல்பட்டி முதல் காவிரி வரையில் வடகிழக்கிலிருந்து தென் மேற்காகச் செல்கிறது. மொரப்பூர் ஜங்ஷனிலிருந்து ஒரு கிளைப் பாதை தர்மபுரி வழியாக ஹோசூர் வரையில் செல்லுகிறது. சேலம் ஜங்ஷனிலிருந்து ஒரு பாதை மேட்டூருக்கும், மற்றொரு பாதை கிழக்கில் ஆத்தூர் வழியாக விருத்தாசலத்திற்கும் அமைக்கப்பட்டு உள்ளன. கிருஷ்ணகிரியிலிருந்து இந்த ஜில்லாவிற்கு வெளியிலிருக்கும் திருப்பத்தூருக்கு ஒரு பாதை உண்டு. இப்பாதைகளின் மீது ஏற்பட்டுள்ள முக்கிய ஸ்டேஷன்களையும், இப்பாதைகள் எந்தெந்தத் தாலுக்காக்களின் வழியாகச் செல்கின்றன என்பதையும்,உங்கள்பாடசாலையில் உள்ள பெரிய ஜில்லாவின் படத்திலிருந்து பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

சேலத்திலிருந்து இந்த ஜில்லாவின் எல்லாத் திசைகளுக்கும் நேர்த்தியான சாலைகள் அமைக்கப்பட்டு உள்ளன. அவைகளையும் படத்தில் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள். சென்னையிலிருந்து பெங்களூர் போகும் டிரங்கு ரோட்டு, கிருஷ்ணகிரி, ஹோசூர் வழியாகச் செல்லுகிறது. சேலத்திலிருந்து இந்த ஜில்லாவின் பலபல பாகங்களுக்கு மாத்திரமே அல்லாமல், பெங்களூர், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, திருப்பத்தூர் முதலிய வெளி ஜில்லாப் பட்டணங்களுக்கும் மோட்டார் பஸ்வண்டிகள் செல்லுகின்றன.

பயிற்சி

1. சேலம் ஜில்லாவிலுள்ள இருப்புப் பாதைகளைக் காட்ட ஒரு படம் வரைக.

2. படத்தைப்பார்த்து இந்த ஜில்லாவில் இருப்புப் பாதைகள் அமைக்கப்பட்ட தாலுக்காக்கள் உண்டா என்பதைக் கண்டு பிடியுங்கள்.

3. சேலத்திலிருந்து பெங்களூருக்கும், திருவண்ணாமலைக்கும் செல்லும் பாதைகள் எந்தெந்தத் தாலுக்காக்களின் வழியாகச் செல்கின்றன?

16. ஜில்லா ஆட்சி

அரசாங்க நிர்வாகத்திற்காக இந்த ஜில்லாவை 10 தாலுக்காக்களாகப் பிரித்திருக்கிருர்கள். அவையாவன: 1. ஆத்தூர், 2. இராசிபுரம், 3. நாமக்கல், 4. திருச்செங்கோடு, 5. சேலம், 6. ஓமலூர், 7. தர்மபுரி, 8. ஹரூர், 9. கிருஷ்ணகிரி, 10. ஹோசூர் என்பன. ஜில்லாவைக் கலெக்டரும், தாலுக்காக்களைத் தாசில்தார்களும் ஆட்சி செய்து வருகின்ருர்கள். இவர்கள் அல்லாமல் கலெக்டருக்குக் கீழ்ப்படிந்த மூன்று டிப்டி கலெக்டர்களும் ஒரு சப் கலெக்டரும் இருக்கிருர்கள். சேலத்தில் ஜில்லா அதிகாரிகள் இருந்து வருகிருர்கள்.

ஸ்தல ஸ்தாபனம் : இந்த ஜில்லாவில் சேலம் ஒன்றுதான் முனிசிபல் பட்டணம். ஜில்லா போர்டு கல்வி, சுகாதாரம் முதலிய துறைகளில், இந்த ஜில்லாவிற்கு உழைத்து வருகிறது. இந்த ஜில்லா போர்டு ஆபீஸ் சேலத்திலேயே இருக்கிறது.

இந்த ஜில்லாவில் மிட்டா கிராமங்களும், ஜமீன்களும் விசேஷம். மலைப் பிரதேசங்களில், சில மலை ஜாதியினரும் ஜமீன் பெற்றிருக்கின்றனர். இங்கு உள்ள முக்கிய ஜமீன்கள், குமாரமங்கலம், நாமக்கல் முதலியன.

பயிற்சி

1. இந்த ஜில்லாவிலுள்ள தாலுக்காக்களைக் காட்ட ஒரு படம் வரைக.
2. இந்த ஜில்லாவில் முனிசிபல் பட்டணங்கள் எத்தனை ? படத்தில் குறித்துக் காட்டுக.

17. தாலுக்காகளும் முக்கிய பட்டணங்களும்

படத்தைப் பாருங்கள். அதில் நீங்கள் போன பாடத்தில் படித்த பத்துத் தாலுக்காக்களும் குறிக்கப்பட்டு இருக்கின்றன. அதில் மற்றும் பல பட்டணங்களும் குறிக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். அவற்றுள் நீங்கள் சுற்றுப் பிரயாணத்தில் நேரில் கண்டவை எவை? அவைகளைக் கீழ் வருவதுபோல் ஓர் அட்டவணை தயார் செய்.

சேலம் ஜில்லா

தாலுக்கா
முக்கிய பட்டணம்
விசேஷ கைத்தொழில்
புண்ய க்ஷேத்திரம்
சுக வாசஸ்தல

சேலம்: இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணம். இது சேர்வராயன் மலையடிவாரத்தில் வெகு அழகாக அமைந்திருக்கிறது. இதைச் சுற்றி நாற்புறங்களிலும் மலைகள் சூழ்ந்திருக்கின்றன. இப் பட்டணத்தின் பூதரை சமமாக, ஈரம் இல்லாமலும் சுகவாசத்திற்கு ஏற்றதாகவும் இருக்கிறது. இப்பட்டணமே நெசவுத் தொழிலுக்குப் பேர் போனது. இங்கிருந்து ஏர்க்காடு போக வசதிகள் இருக்கின்றன. இது ஒரு பெரிய இருப்புப் பதைகள் கூடும் ஸ்டேஷன். (ஜங்ஷன்)

தாரமங்கலம் : இந்த ஜில்லாவில் கல்தச்சு வேலைத் திறத்தைக் காட்டும் ஓர் அழகிய கோவில் இவ்வூரில் இருக்கிறது. இது மேட்டூர் செல்லும் பாதையில் இருக்கிறது. இது மச்சேரி ரோட் ஸ்டேஷனிலிருந்து மூன்று மைல் தூரத்தில் இருக்கிறது. இது ஓமலூர் தாலுக்கவைச் சேர்ந்தது.

மேட்டூர் : இது ஓமலூர் தாலுக்காவில் காவிரிகரையிலுளது. இது இப்பொழுது அங்குக் கட்டப்பட்டுள்ள மேட்டூர் அணையினுல் பிரசித்திப் பெற்றுள்ளது. இங்குள்ள அணை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள அணைகள் எல்லாவற்றிலும் மிகவும் பெரிய



சேலம் ஜில்லா—தாலுக்காக்களும் முக்கிய பட்டணங்களும்

தென்றுக் கருதப்படுகிறது. அணை மேட்டூர் ஸ்டேஷனுக்கு அருகிலேயே உள்ளது இங்குப் பள்ளத்தாக்கில் காவிரி பாய்வதும், அதைச் சுற்றியுள்ள காடுகளும் பார்ப்பதற்கு ஆனந்தத்தை விளைக்கக் கூடியவையாக இருக்கின்றன.

ஹோஸூர்: ஐரோப்பியர் வாசத்துக்கு ஏற்ற பூத நிலையுடையது. இது. ஹோஸூர் தாலுக்காவில் சுமார் 4000 அடி உயரத்துக்கு மேல் இருக்கிறது. இது அமைந்திருக்கும் இடச்தைப் மைசூர் பீடபூமியின் தொடர்பாகக் கொள்ளலாம்.

நாமக்கல்: இது நாமக்கல் தாலுக்காவில் நாமக்கல் மலையடிவாரத்தில் இருக்கிறது. இது ஒரு புராதனமான பட்டணம். மலையடிவாரத்தில் உள்ள நாமகிரி பட்டணம் மிகப் பிரசித்திப் பெற்றது.

கிருஷ்ணகிரி: இது கிருஷணகிரி தாலுக்காவில் உள்ள ஓர் அழகான பட்டணம் இது திராக்ஷைக்குப்பெயர் போன ஊர் இங்கு நல்லெண்ணெய் விசேஷம், இங்குப் பல நல்லெண்ணெய் ஆலைகள் இருக்கின்றன.

பயிற்சி

1, படத்தைப்பார்த்து ஒவ்வொரு தாலுக்காவிலும் உள்ள மற்ற ஊர்களை எழுது. அவைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் உனக்குத் தெரிந்த விவரங்களை எழுது.

2. தாலுக்காக்கள் குறிப்பிட்டுள்ள படத்தையும், பொருள்கள் குறிப்பிட்டுள்ள படத்தையும் சேர்த்துப் பார்த்து, எந்தெந்த தாலுக்காவில் என்னென்ன பொருளகள் விசேஷம் என்பதைச் சொல்

3. படம் ஒன்றுவரைந்து அதில் முக்கிய பட்டணங்களையும் அவற்றின் விசேஷத்தையும் குறிப்பிட்டு எழுது,

சீதோஷ்ணமும் விளை பொருள்களும் மனித வாழ்க்கையும்

பிள்ளைகளே, நாம் இது வரையில் நமது ஜில்லாவின் பல பாகங்களைச் சுற்றிப் பார்த்தோம்; அன்றியும் அதைப் பற்றிய விவரங்கள் யாவும் படித்தும் அறிந்தோம். ஆகவே நமது ஜில்லாவின் இயற்கை அமைப்பும் இருப்பிடமும் அதன் வெப்ப நிலைக்குக் காரணம் என்று தெரிந்தது. இவை இரண்டுமே இந்த ஜில்லாவின் விளைபொருள்களுக்கு ஆதாரமாக அமைந்திருப்பதும் வெளியாயிற்று. விளைபொருள்களுக்கு ஏற்றவாறே மக்கள் தொழில்கள் அமைந்து உள்ளன. பூசாரமும், விளைபொருள்களும், தொழில்களும் கிராமம் அல்லது பட்டணங்கள் தோன்றக் காரணமாக இருக்கின்றன. பட்டணங்களின் அமைப்பே போக்குவரவுச் சாதனங்களை நிர்ணயிக்கின்றன. இவைகளால் பூகோள சாஸ்திரம் எனப்படுவது பூமியின் மீது மனித வாழ்க்கையை வர்ணிக்கும் நூல் என்று நீங்கள் அறியவேண்டும். மேல் வகுப்புக்களில் நீங்கள் பூகோள சாஸ்திரத்தைப் படிக்கும்போது இதை நினைவில் அமைத்துக்கொண்டு படிக்க வேண்டும்.

மேலும் நாம் பொதுவாக இப்பாடத்தில் சில விஷயங்களை அறிந்துக் கொள்வோம். உங்களுக்கு மழை உண்டாக வெப்பம் அவசியம் என்பது தெரியும். வெப்பத்தினுல், நீர் நிலைகளில் உள்ள ஜலம் ஆவியாக மாறி உயரக் கிளம்புகின்றது என்றும், அது அங்கு மப்பாக மாறுகிறது என்றும் கூட உங்களுக்குத் தெரியும். மேகங்களைக் காற்றடித்துக் கொண்டுவந்து, நில பாகங்களுக்கு மழையைத் தருகிறது அல்லவா?

மழை எல்லா இடங்களிலும் பெய்கிறது. அதற்கு காடு, மேடு, மலை என்னும் வித்தியாசம் இல்லை. எனவே, மனுஷ நடமாட்டம் இல்லாத மலைகளிலும், சமநிலப் பிரதேசங்களிலும் நல்ல மழை பெய்யுமானுல், அவ்விடங்களில் காடுகள் ஏற்படும் என்பதை நாம் வாசித்திருக்கிறோம். ஜன வாழ்க்கை உள்ள விடங்களில் நல்ல மழை பெய்தால் அவ்விடங்களில் விவசாயம் நடைபெறும். விவசாயம் நடைபெற பூசாரம் நன்முக இருக்கவேண்டும் என்பதும் நீங்கள் அறிவீர்கள். மழை குறைவான இடங்களில் என்ன விசேஷமாகப் பயிராகிறது? சாமான்யமான பூசாரம் உள்ள இடங்களில் சொல்ப மழை உண்டேயானுல், அங்கு புன்செய்ப் பயிரே விசேஷம். புன்செய் நிலங்களில் கருத்த களிமண் உள்ள இடங்களில் பருத்தி விசேஷமாகப் பயிராகும்.

மழையே இல்லாத இடங்கள் முட்புதர்களாகவும், புல் தரைகளாகவும் இருக்கும். இவ்விடங்களில் ஆடு மாடு மேய்ப்பது விசேஷமாக நடைபெறுகிறது. மலைகளில் காடுகளை ஆங்காங்கு அழித்துத் தோட்டங்கள் உண்டாக்கப்பட்டு இருக்கின்றன. இந்தத் தோட்டங்களில் என்ன விசேஷமாக கிடைக்கும் என்று நீங்கள் சொல்ல முடியுமா? விசேஷமாக ஏலக்காய், மிளகு இவை போன்ற வாசனைத் திரவியங்களும், ரப்பர், காப்பி, தேயிலை இவைகளும் கிடைக்கின்றன. இத்தோட்டங்கள் மிகப் பெரியனவாக இருக்கும்.

விசேஷமாக நல்ல மழையும் பூசாரமும் உள்ள இடங்களில் ஆங்காங்குப் பழம், காய்கறித் தோட்டங்கள்

இருக்கின்றன. யோசித்துப் பார். இவைகள் அனேகமாக எங்கு ஏற்படுகின்றன? இவைகள் சாதாரணமாகப் பட்டணங்களுக்கு அருகாமையிலும், பட்டணங்களுக்குச் சீக்கிரம் கொண்டு செல்லும் வசதியுள்ள இடங்களிலும் அதிகமாக ஏற்படுகின்றன.

காடுகளில் மரவகைகள் அதிகம். எனவே காடுகளில் உள்ள ஜனங்கள் மரம் வெட்டுவதையும், காட்டுப் பொருளைச் சேகரிப்பதையும் விசேஷ தொழிலாக நடத்துகின்றனர். சமவெளிகளில் விவசாயம் விசேஷமான தொழில். பருத்தி நிலங்களில் என்ன தொழில் விசேஷம்? பருத்தி எடுப்பதும் அதினின்று கொட்டை நீக்குவதும், நூல் நூற்பதும் நெசவுமே ஆகும். இக்காலத்தில் பருத்தி விசேஷமாகக் கிடைக்கும் இடங்களில் தொழிற் சாலைகள் ஏற்படுகின்றன. எனவே, இத் தொழிற்சாலைகளில் வேலை செய்வதும் ஒரு தொழிலே ஆகும்.

எனவே சீதோஷ்ணம் ஓர் இடத்தில் கிடைக்கும் பொருள்களையும், சீதோஷ்ணமும் பொருள்களும் இணைந்து அங்கு ஜனவாழ்க்கையையும் அமைக்கின்றன. இதை நீங்கள் கண்கூடாகத் தினசரி வாழ்க்கையில் கண்டறியுங்கள்.

பயிற்சி

1. உங்கள் ஜில்லாபடம் ஒன்று வரைந்து, அதில் ஆங்காங்கு ஏற்படக் கூடிய சீதோஷ்ண நிலையைக் குறிப்பிடுங்கள். இதை பல வர்ணம்பூசிக் காட்டுங்கள். ஒவ்வொரு சிதோஷ்ண நிலையுள்ள பாகத்திலும் கிடைக்கும் முக்கிய பொருள்களைக் குறிப்பிடுங்கள்—அங்கு அவைகளுக்கேற்ப தொழில்கள் என்ன நடைபெருகின்றது என்று ஒரு கட்டம் இட்டு அதில் குறிப்பிடுங்கள்.

2. காடுகளில் என்ன தொழில் விசேஷம்?

3, பருத்தி நிலங்கள் எனப்படுபவை எவை? அந்நிலங்களின் முக்கியத் தொழில்கள் எவை?